
# தமிழிசை

இதழ் - 02



"எமது பிரதேசத்தின் தொன்மைகளைத் தேடும்
பன்முக கலை, இலக்கிய இதழ்"

பிரதேச செயலகம் - குச்சவெளி

# தமிழிசை

**இதழ் - 02**

**“எமது பிரதேசத்தின் தொன்மைகளைத் தேடும்**
**பன்முக கலை, இலக்கிய இதழ்”**

**இலைமறை காயாக எமக்குள் மறைந்துள்ள எமது**
**திறமைகளையும் இளந்தலைமுறையினருக்கான களத்தினையும்**
**அமைத்துக் கொடுப்பதற்கான ஒரு முயற்சி.**


வெளியீடு:
பிரதேச கலை, இலக்கிய வட்டம்,
பிரதேச செயலகம்,
குச்சவெளி.

## இதழ் விபரம்


| | | |
|---|---|---|
| இதழ் தலைப்பு | : | தமிழிசை |
| இதழ் விடயம் | : | கலை இலக்கியம் |
| பதிப்பு | : | 01 ஜூன் 2022 |
| இதழாசிரியர் | : | ச. கோபிரமணன் |
| பக்கங்கள் | : | 61 |
| ஆலோசனைக் குழு | : | |

திரு. கு. குணநாதன்
(பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், குச்சவெளி)

திருமதி. இ. பாமா
(உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், குச்சவெளி)

திரு. ச. அன்ரனிதாஸ்
(கணக்காளர், பிரதேச செயலகம், குச்சவெளி)

திரு. இ.மு. நாசிக்
(உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், குச்சவெளி)

| | | |
|---|---|---|
| மொழி செம்மையாக்கம் | : | நாகேஸ்வரன் சுமதி (DO) |
| ஒழுங்கமைப்பு | : | M.R.M.R. கபீல் (TAO) |
| முகவரி | : | "தமிழிசை"<br>பிரதேச கலை, இலக்கிய வட்டம்,<br>பிரதேச செயலகம்,<br>குச்சவெளி.<br>www.tamilicai2022@gmail.com<br>WhatsApp_ 0771385004 |

# ஆசிரியர் உரை

03.01.2022 அன்றைய தினம் வருடத்தின் தொடக்க வேலை நாள் எனும் அடிப்படையில் எமது அலுவலக ஊழியர்களின் திறமைகளை வெளிக் கொண்டு வரும் வகையில் தமிழிசை எனும் பன்முக கலை இலக்கிய இதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது.

எமது பிரதேச செயலாளர் அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் வெறும் கவிதை இதழாக மட்டுமே வெளியிடத் திட்டமிட்ட தமிழிசை இதழானது கவிதையோடு மட்டும் நின்று விடாது ஏனைய இலக்கிய வடிவங்களையும் உள்ளடக்கியதாகவும் அலுவலக ஊழியர்கள் மட்டுமின்றி எமது குச்சவெளி பிரதேச சகல படைப்பாளிகளுக்கும் களமமைத்துக் கொடுக்கும் வகையிலும் விஷேடமாக பாடசாலை மாணவர்களுக்கு களமமைத்துக் கொடுக்கும் வகையிலும் அமைய வேண்டும் என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் பன்முக இதழாக பரிமாணம் பெற்றது.

தமிழிசை இதழ் 2ற்காக ஆக்கங்கள் பெற்றுக் கொள்ளும் முகமாக பன்முகப்படுத்தப்பட்ட வகையில் நாம் முயன்றாலும் எமக்கு எந்த வகையிலும் அது சாதகமாக அமையவில்லை இன்றைய கால கட்டத்தின் நிலை அவ்வாறானதொரு பின்னடைவிற்குக் காரணமா? அல்லது எமது எழுத்துக்களை பதிவிட எண்ணமற்ற சூழ்நிலையில் நாம் இருக்கிறோமா… என்ற எண்ணத்தை எமக்கு தோற்றுவிக்கின்றது.

பாடசாலைகளில் இருந்து அவர்களுடைய வழிகாட்டுதலில் இந்த இதழில் எந்த ஆக்கமும் இடம் பெறாமையானது மிகுந்த வேதனையை தருவதுடன் பாடசாலைகளுடனான எமது அணுகுமுறையில் ஏதாவது மாற்றங்களைக் கொண்டு வர வேண்டுமா? என எண்ணத் தோன்றுகிறது.

தமிழிசை இதழ் 2 மிகவும் காலம் தாழ்த்தியே வெளிவருகின்றது. இந்த தாமதத்திற்கான நியாயப்படுத்தல்களை சொல்லி ஆசிரியர் என்ற அடிப்படையில் நான் தப்பிக்கொள்ள முயலவில்லை தாமதத்திற்கான முழுப்பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்வதுடன் எதிர்கால செயற்பாட்டில் பல மாற்றங்களுக்கான

படிப்பினைகளை அவை எனக்கு தந்துள்ளன. தமிழிசை இதழ் 3 உரிய காலத்தில் வெளிவர எனது செயற்பாட்டை தொடங்க முனைகின்றேன்.

இந்த இதழில் இடம் பெற்றுள்ள படைப்புக்கள் தொடர்பாக ஆசிரியர் என்ற வகையில் நான் எதையும் கூறப் போவதில்லை. இவ்விதழில் ஆண்டு 05 மாணவர்கள் தொடக்கம் அனுபவமிக்க படைப்பாளிகள் வரையான சகல மட்டத்தினரதும் படைப்புக்கள் இடம் பெற்றுள்ளன. ஆக்கங்களின் கனதி தொடர்பாக ஆக்க பூர்வமான விமர்சனங்களை நீங்கள் தான் முன் வைக்க வேண்டும்.

தமிழிசை இதழின் வளர்ச்சி பன்முகப்பட்ட இயங்கு தளங்கள் நோக்கி விரிவடைய எமது பிரதேச செயலாளர் அவர்களுடைய தூர நோக்கான பார்வை இவ்விதழினூடாக சாத்தியப்படவும் சில இலக்குகளை நாம் அடைய வேண்டியுள்ளது.

1. தழிழிசை இதழ்க்குழு ஒன்றினை உருவாக்குதல்.
2. பிரதேச கலை இலக்கிய வட்டத்தினைத் தாபித்தல்.
3. கிராம சேவகர் மட்டத்தில் படைப்பாளிகளை இனங்காணல்.
4. இதழுக்கான ஆக்கங்களை பெற்றுக் கொள்வதற்கான வழிகளை விஸ்தரித்தல்.

மேற்படி இலக்குகளை அடைவதற்காக ஆர்வமுள்ள சுயவிருப்புடன் முன்வருபவர்களை இனங்கண்டு கூட்டாகச் செயற்பட வேண்டும். அப்போது தான் எமது இலக்கை நோக்கி நாம் சரியாக பயணிக்கலாம்.

பகிர்ந்து கொள்ள பல இருந்தாலும் மறுபடியும் சந்திப்போம்...

எதிர்பார்ப்புடன்....

- ஆசிரியர்

# கைத்தொலைபேசி

*அதிகாலையில் ஒலித்திடும் – உன்*
*அலார ஓசையுடன் இன்பமாய்*
*ஆரம்பிக்கிறது என் விடியல்...*
*நீயின்றி நானில்லை*
*என்றே ஆனது என்தேடல்...*

*உன் அழைப்பிலும், செய்தியிலும்*
*நகர்கிறது என் நாட்கள்..*
*தூரத்தில் உள்ளோரெல்லாம்*
*அருகிலேயே உணர்கிறேன்*
*நீ கரங்களில் தவழ்கையில்...*



*இருள் கவ்விய இரவிலும்*
*என் முகத்தில் மட்டும் வெளிச்சம்...*
*பிரகாசிக்கும் உன் ஒளியினால்...*
*கண்களோ மங்கிப்போக*
*செவிகளோ ஒலியிழக்கிறது...*

*அவ்வப்போது தலைவலியும்*
*தூக்கமின்மையால் அசதியும்..*
*சிந்தையில் எதுவும்*
*நினைவுகொள்ளத் தேவையில்லை*
*நினைவகமாய் நீ இருப்பதனால்...*

*இன்னது வேண்டுமென*
*உன்னிடம் கேட்டால் போதுமே...*
*எண்ணிமுடிக்கும் கணத்தினுள்ளே*
*எடுத்துரைப்பாய் நீயே*
*உள்ளதையும், இல்லாததையும்..*

*ஊர்வம்பழக்க வேண்டாமே*
*ஊரே வாய்மூடுமளவும்*
*வதந்திகளை சுமந்துவருவாயே...*
*உறவுகளெல்லாம் இன்று*
*உணர்விழந்தனவே உன்னால்...*

*நவயுக கதாநாயகன் நீ...*
*அழிவின் அதிதியும் நீ...*
*ஆக்கினைகள் செய்பவனே...*
*கயமைகள் நீ புரிந்தாலும்*
*கலைக்கமுடியவில்லையே உன்னை...*

*காலமதைக் களவாடி*
*நேரந்தனைக் கொள்ளையிட்டு*
*மொத்தத்தையும் முடமாக்கிய*
*கைத்தொலைபேசியே...*
*எப்படி மீட்டிடுவோம் எம்மை...*

**திருமதி. பிரியதர்ஷினி லவன்**
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், குச்சவெளி.

# வாழ்க்கை

*வாழ வேண்டிய காலமதில்*
*பணம் தேடி அலைந்துவிட்டோமோ!*
*வாழ்க்கையை வாழ உழைக்கிறேன் என்று*
*வாழ்க்கை வாழ்வதற்குள்*
*இளமை தொலைந்து விட்டதோ!*
*பள்ளி தொடங்கி கல்லூரி வரை*
*கல்வி கற்க ஓடி...*
*வாழ்க்கை வாழ*
*பணம் தேடி ஓடி...*
*வாழ்க்கை முழுவதும்*
*தேடலும் ஓடலுமாய்*
*இளமை தொலைந்து விட்டதே!*
*பணத்திற்காக ஒரு வேலை*
*இயந்திரம் போல வாழ்க்கை*
*அன்று என் தந்தை தொடங்கி*
*இன்று நான் வரை*
*நாளை எனது பிள்ளைக்கும்*
*இதே நிலையோ*
*குடும்பத்துக்காக என்று*
*எண்ணி எண்ணி*
*குடும்பத்துடன் பொழுதினை*
*கழிக்க தவறிவிட்டோமோ*
*தவறவிட்ட இனிய தருணங்களை*
*மீண்டும் வாழ்ந்திட முடியாது*
*வாழ்க்கை ஒருபோதிலும்*

*உனக்காக பின் நோக்கி செல்லாது*

*வேலை தேவை வாழ பணம் தேவை*

*வாழ்ந்திட வாழ்க்கையும் தேவை*

*வாழ்வு ஒரு முறைதான்*

*நேரம் ஒதுக்கி*

*மகிழ்ச்சியாகவும் வாழ்ந்திடு*

*காலம் கடந்த பின்*

*கவலை கொள்ளாதே!*

*உனக்கான இந்த வாழ்க்கை*

*நிச்சயமற்றது.....*

*ஒவ்வொரு நிமிடத்தினையும்*

*இரசித்து வாழக் கற்றுக் கொள்.......*


**திருமதி. சிவநயனி நிலாதரன்**

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

பிரதேச செயலகம்

குச்சவெளி




# அம்மா

*"அம்மா... "*
*நான் உணர்ந்த*
*முதல் வார்த்தை*
*முதல் உணர்வு*
*முதல் உலகம்*



*நான்*
*நீ*
*உலகம் ... என என்னை*
*இத் தரணியில்*
*தடம் பதிக்கச் செய்தாய் நீ*

*தலைக்கனமும்*
*திமிரும் இல்லா ஓர் உறவு*
*எத்தனை முறை காயப்படுத்தினாலும்*
*கணப்பொழுதில் கைகோர்த்து நிற்கும்*
*உறவு அவள்*
*என் அம்மா*

*பேசியும் புரியாத உறவுகளுக்கிடையில்*
*பேசாமல் புன்னகையால் புரிந்து கொள்ளும்*
*உணர்வு அவள்*

*வரலாறும் மாறிப்போகும்*
*மதி நுட்பமும் வளர்ச்சிகாணும்*
*ஆனால்*
*அன்னையின் அன்புக்கு ஈடு*
*அவள் மட்டுமே*

*உன்னோடு நான் நடந்து வந்த பாதையில்*
*முட்களோ*
*கற்களோ ...இல்லை*
*மீண்டும்*
*உன் கரம் பிடித்து நடக்க விரும்புகின்றேன்*
*அம்மா ...*
*உன் குழந்தையாய்*

*வலி நிறைந்தது என்பதற்காக*
*யாரும்...!*
*விட்டுவிடுவதில்லை,*
*தாய்மையினை*

*அருகில் இருக்கும் போதே*
*அனுபவித்துக்கொள்*
*தொலைத்து விட்டு தேடாதே*
*அருமை அமுதசுரப்பியான*
*அன்னையின் பாசத்தினை*

*எனது அன்னைக்காக...!*

**லதாகரன்.தமிழ்ச்செல்வி .ஹரீசா**
நிர்வாகக்கிளை
பிரதேச செயலகம்
குச்சவெளி

# எதிர்பார்ப்பு

இரவு மணி 11 ஐ தாண்டியிருந்தது. நாளைய பொழுதின் நினைவுகள் அவளைத் தூங்க விடவில்லை. இப்படியான தருணங்களில் கொஞ்ச நேரம் காலாற நடந்தால் உறக்கம் வரும் என்ற நினைப்பில் மாடிக்கு வந்தாள் சுகுணா. மனிதனின் மனச் சோர்வுக்கு இயற்கை தானே அருமருந்து.

அன்று முழுநிலவு. அத்தோடு குளிர்ந்த காற்றும் சேர்ந்து கொண்டது. அது உடலுக்கும் மனசுக்கும் இதமாய் இருந்தது. ஆனால், மனது அதில் ஒட்டவில்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவரவர் மனம் தானே எதிரி. அவள் மட்டும் விதிவிலக்காகிவிட முடியுமா என்ன? விடிந்தால் புதன்கிழமை. சுகுணா தனது திருமணத்திற்காக இந்தியாவிற்கு பயணமாக வேண்டும்.

மூன்று வருடங்களுக்கு முன் இதே போன்றதொரு பௌர்ணமி நாளில் தான் எத்தனையோ ஆசைகளையும் கனவுகளையும் தாங்கி திருமணத்திற்கென இந்தியா சென்று, இந்தியாவில் கால் பதித்த மறுகணமே அடுத்த பிளைட்டில் தாய்நாடு திரும்பியவள் சுகுணா.

மாடியில் நின்று முழுநிலவை ரசித்துக் கொண்டிருந்த சுகுணா அவளையுமறியாமல், இம்முறையும் திருமணம் நிறைவேறும் வரை கடந்த முறையைப் போல தவறாக எதுவும் நடந்து விடக் கூடாது என தனது இஸ்ட தெய்வமான விநாயகரை பிரார்த்தித்துக் கொண்டு கடந்த கால நினைவுகளில் மூழ்கிப் போனாள்.

திருகோணமலையின் நிலாவெளியை பிறப்பிடமாகக் கொண்டவள் சுகுணா. அவளது குடும்பம் தாய் தந்தையர் உட்பட 6 பேரைக் கொண்ட அழகான குடும்பம். சகோதரர்கள் ஒவ்வொருவரும் ஒருத்தர் மேல் ஒருவர் காட்டும் பாசத்திற்கு யாரும் இணையாகி விட முடியாது. தாய் தந்தையர் கூட நண்பர்களைப் போல அன்னியோன்யமாக பழகுபவர்கள்.

சுகுணாவின் மூன்று தமையன்மாரும் திருமணமாகி வெளிநாட்டில் குடியேறியவர்கள். கடைக்குட்டியான அவளையும் வெளிநாட்டில் திருமணம் முடித்துக் கொடுக்க தீர்மானித்தனர். ஆனால், சுகுணாவோ தாய் தந்தையரைப் பிரிந்து தன்னால் வரமுடியாது என்றும், தானும் வெளிநாடு போனால் பெற்றோர் தனித்து விடுவார்கள் என்றும் தான் கடைசி வரை இங்கேயே இருந்து விடுவதாகவும் பெற்றோரிடமும், சகோதரர்களிடமும் பலதடவை கெஞ்சிப் பார்த்தாள். அதற்கு அவளது பெற்றோரோ "இங்க பார் பிள்ள! இஞ்ச எங்கட காலம் இன்னம் 5 வருசமோ 10 வருசமோ தெரியாது. அங்க உன்ர அண்ணன்மார் இருக்கினம். ஏதாவது பிரச்சினையெண்டாலும் பக்கத்தில அவங்க பாத்துக் கொள்ளுவாங்க. அதால இந்தக் கதையெல்லாம் விட்டுப் போட்டு அண்ணாக்கள் பாக்கிற மாப்பிள்ளைய பிடிச்சிருக்கா எண்டு மட்டும் சொல்லு. மிச்சத்த அவங்க பார்த்துக் கொள்ளுவாங்க" என்று அறிவுரை கூறினர்.

ஒருவாறாக யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ராகவனின் போட்டோவைப் பார்த்ததும் சுகுணாவிற்கு பிடித்துப் போக மிகுதி வேலைகளை செய்வது அவளது குடும்பத்தினருக்கு இலகுவாகிப் போனது. ராகவன் கனடாவில் தனியார் கம்பனி ஒன்றில் எக்கவுண்டனாக வேலை பார்க்கிறான். அவனது குடும்பத்தில் அவனும் அவனது வயதான தாயும் மட்டுமே உள்ளனர். பெண்பிள்ளை இல்லாததால் சுகுணாவை அவர்கள் தங்களது பிள்ளை மாதிரியே நடத்துவார்கள். அவளுக்கு இதவிட பொருத்தமான இடம் வேறெங்கும் கிடைக்காது என்று எண்ணி ராகவனையே சுகுணாவிற்கு நிச்சயம் செய்தனர்.

ராகவனின் குடும்பம் இலங்கைக்கு வரமுடியாத சூழ்நிலையால் இந்தியாவில் திருமணத்தை நடாத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. சுகுணாவின் தமையன்மார் அனைவரும் சேர்ந்து திருமண ஏற்பாடுகளை கவனிக்க, சுகுணாவோ திருமண கனவுகளோடு காலத்தைக் கழித்தாள். திருமணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே இலங்கையிலிருந்து சுகுணாவும் பெற்றோரும் இந்தியா செல்ல வேண்டியுள்ளமையால் அங்கு அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளையும், தங்குவதற்கான வீட்டினையும் தமையன்மார் ஒழுங்குபடுத்தினர்.

திருமண நாள் நெருங்க நெருங்க சுகுணாவின் இதயம் படபடத்துக் கொண்டது. அவளது குடும்பம் இந்தியா செல்வதற்கான நாளும் வந்தது. ஆனால் அன்று காலையிலிருந்தே ராகவனின் போன் வேலை செய்யவில்லை. சுகுணாவோ அதைப் பெரிசுபடுத்தாமல் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்தாள். அன்றிரவு பஸ்ஸில் கொழும்புக்கு புறப்பட்டனர். கொழும்பு போய் சேரும் வரையும் சுகுணா மாறி மாறி ராகவனை தொடர்பு கொள்ள முயன்றும் பயனேதும் கிடைக்கவில்லை. அவளது மனது பதை பதைத்தது.

அவளது தாயோ "நீ பயப்பிடாத புள்ள. அவருக்கு அங்க என்ன வேலையோ தெரியல்ல. களியாணத்துக்கு இன்னம் ஒரு மாசம் இருக்கு தானே! இப்ப போன் வேல செய்யாட்டி என்ன. இந்தியா போய் தொடர்பு கொள்ளுவம். இல்லாட்டி உன்ர தமையன்மார் இருக்கினம் தானே! எதுக்கு பயப்படுகிறாய்?" என்று அறிவுரை கூறினாள்.

சுகுணாவும் மனதை கல்லாக்கி கொண்டு பொறுமையுடன் இருந்தாள். மறுநாள் காலை 5.30 க்கு பிளைட். தாயும் அவளும் 4 மணிக்கே விமான நிலையத்தை அடைந்தனர். சுகுணா, தனது இஸ்ட தெய்வமான விநாயகப் பெருமானிடம் "பிள்ளையாரப்பா! ராகவனுக்கு எந்தப் பிரச்சினையும் வந்திருக்கக் கூடாது. என்ர களியாணம் நல்லபடியா முடியணும். எல்லாம் நல்லபடியா முடிஞ்சா நான் உனக்கு பொங்கல் வைக்கிறன்" என்று வேண்டிக் கொண்டாள்.

விமான நிலையத்தில் செக்கப்புகள் எல்லாம் முடிந்து சரியாக 5.30 இற்கு விமானம் புறப்பட்டு காலை 9.00 மணியளவில் விமானம் சென்னை விமான நிலையத்தில் தரையிறங்கியது. சுகுணாவும் தாயும் அங்கிருந்து அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீட்டை அடைந்தனர்.

அங்கு சென்றதும் பயணக் களைப்பு தீர ஒரு குளியலைப் போட்டு விட்டு சுகுணா தனது மூத்த தமையனை தொடர்பு கொண்டாள். "அண்ணா! ராகவன்ட போன் 3 நாட்களாக வேலை செய்யல்ல. என்ன பிரச்சினையோ தெரியல்ல. நீ ஒருக்கா எடுத்துப் பாரன்." என்றாள்.

"நீ பயப்படாத சுகுணா. நான் இப்பவே கோல் எடுக்கிறன். இல்லாட்டி நேர்லயே போய் பாக்கிறன். என்று கூறி போனை வைத்த தமையனாலும்

ராகவனை தொடர்பு கொள்ள முடியவில்லை. பலதடவைகள் முயன்றும் பயனளிக்காமையால் ராகவனின் வீட்டிற்கு நேரிலேயே சென்று பார்த்து விடலாம் என்று தம்பிமார் இருவரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

4 மணி நேர பயணத்தின் பின் ராகவனின் வீட்டை அடைந்த அவர்களுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. ராகவனும் தாயும் வீட்டிலேயே இருந்தனர். சுகுணாவை தனக்குப் பிடிக்கவில்லை என்றும், இந்தத் திருமணத்தை நிறுத்தி விடுமாறும் ராகவன் அவர்களிடம் கூறினான்.

"என்ன காரணம்? இவ்வளவு ஏற்பாடுகளுக்குப் பிறகு எப்படி திருமணத்தை நிறுத்துவது? நீங்கள் யோசித்துத் தான் கதைக்கிறீர்களா? ஏன் இந்த தீடீர் முடிவு? அம்மாவும் தங்கச்சியும் இந்தியா போயிற்றினம். இப்ப போய் இத சொல்றிங்க" என்று ராகவனிடம் அடுக்கடுக்காய் பல கேள்விகளைத் தொடுத்தனர் சுகுணாவின் அண்ணன்மார்.

அதற்கு ராகவன் "காரணம் எல்லாம் இப்ப விளக்கிச் சொல்ல ஏலாது. தயவு செய்து பிரச்சினை பண்ணாம களியாணத்தை நிறுத்துங்கோ. இப்ப முதல்ல வெளிய போங்கோ" என்று அவர்களை வெளியில் துரத்தி கதவை மூடினான்.

இவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இதை எப்படி தாயிடமும் தங்கையிடமும் கூறுவது. மனமுடைந்து போயினர் மூவரும். வீட்டிற்கு வந்து சுகுணாவிற்கு அழைப்பை எடுத்த தமையனுக்கு பேச்சு வரவில்லை. மாறாக அழுகையே பீறிட்டது.

சுகுணாவோ "என்ன அண்ணா? ராகவனுக்கு ஏதாவது நடந்து விட்டதா? அழாம விசயத்தைச் சொல்லு என்று பதைபதைத்தாள். திருமணத்திற்கு முன்பே ராகவன் மீது இவ்வளவு பாசத்தை வைத்திருக்கும் தங்கையிடம் ராகவன் தான் இந்த திருமணத்தை நிறுத்தச் சொன்னார் என்று எப்படி சொல்வது? செய்வதறியாமல் திணறிப் போனான் தமையன்.

"எப்படியிருந்தும் இந்தத் திருமணம் நடக்கப் போவதில்லை தானே! விசயத்தை சுகுணாவிடம் சொல்லத்தானே வேணும்" என்ற தம்பியின் அறிவுரைப்படி தமையன் அவளிடம் "இங்க பாரம்மா! நீ ஒண்டுக்கும் யோசிக்காத!

இதவிட நல்ல மாப்பிள்ளைய உனக்கு நான் பாக்கிறன். அவன் வேணாம். அவன்ர நினைப்ப உன் மனதில் இருந்து எடுத்துவிடு.” என்று சொன்னது தான் தாமதம் “அண்ணா என்ற பீறிட்ட குரலில் முதல்ல விசயத்த சொல்லு. என்ன நடந்தது? ராகவனுக்கு என்ன? எதுக்கு நீ இப்படியெல்லாம் சொல்றாய்?” என்றாள் சுகுணா.

“இல்லடா. அண்ணா சொல்றதக் கேள். அவனுக்கு உன்ன பிடிக்கலயாம். களியாணத்த நிறுத்த சொல்லிற்றாங்க. பிடிக்கல என்றவனிட்ட நான் திரும்பி என்னத்தக் கதைக்கிற? எல்லாம் நல்லதுக்கு என்று நினைத்துக் கொள். களியாணத்துக்கு முன்னாடியே அவன பற்றி தெரிஞ்சது எவ்வளவு நல்லதாப் போயிற்று. நீ தப்பினாய் என்று நினைத்துக் கொள். நீ கும்பிட்ட கடவுள் உன்ன கைவிடல்ல.” என்று அவளுக்கு புத்திமதி கூறினான்.

ராகவனை கணவனாகவே கருதி வந்த சுகுணாதான் பெரும் பாடுபட்டுப் போனாள். அவளாள் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை. கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் பெருகியது. தாயின் மடியில் தலை வைத்து விம்மி விம்மி அழுதாள்.

தாயும் செய்வதறியாது சுகுணாவிடம் “பாரம்மா தலையோட போக வேண்டியது தலைப்பாகையோட போயிற்று என்று சந்தோசப்பட்டுக் கொள். களியாணத்துக்குப் பிறகு இப்பிடி நடந்திருந்தா நீ வாளா வெட்டியாத்தான் இருந்திருப்பாய். அதவிட இப்ப அவன பற்றி தெரிஞ்சது நல்லதாப் போயிற்று. இத விட நல்ல சம்பந்தம் கிடைக்கும் உன்ன பூப்போல தாங்கிற கணவன் கிடைப்பான்” என்று புத்திமதி கூறி மறுநாள் மீண்டும் தாய்நாடு திரும்பினர்.

திருமணத்திற்கென போனவர்கள் திருமணம் நடக்காமல் வந்ததும் ஊரிலுள்ளவர்களேல்லாம் சுகுணாவையே தவறாகப் பேசினர். அனைத்தையும் பொறுமையோடு தாங்கிக் கொண்டதோடு, தமையன்மாரினதும் தாயினதும் பேச்சுக்களில் இருந்த உண்மையை விளங்கிக் கொண்ட சுகுணா தன்னை சுதாகரித்துக் கொண்டாள். மனதில் கவலை இருக்கத்தான் செய்தது. ஆனாலும் அவள் அதனை வெளிக்காட்டவில்லை. தனது குடும்பத்தின் சந்தோசத்திற்காய் ராகவனை மறந்தது போல் நடித்தாள். இவ்வாறாக மூன்று வருடங்கள்

கடந்தன. மீண்டும் அவளது அண்ணன்மார்  அவளுக்கு வெளிநாட்டிலேயே மாப்பிள்ளை பார்த்தனர். இம்முறை அவர்கள் பார்த்தது அவர்களது சொந்த இடத்தைச் சேர்ந்த சுகுணாவை சிறுவயது முதலே தெரிந்த சந்துருவைத் தான். அவளுக்கும் சந்துருவைப் பிடித்துப் போக அடுத்த மாதமே திருமணம் நிச்சயமாகி விட்டது. இன்னும் ஒரு வாரத்தில் திருமணம். நாளையே இந்தியாவிற்குப் பயணமாக வேண்டும்.

“பிள்ள இந்த நேரத்தில போய் என்னத்த யோசிச்சுக் கொண்டு நிக்கிறாய். நாளைக்கு நேரத்துக்கு வெளிக்கிடவேணுமல்லோ”. என்ற தாயின் குரல் கேட்டு நிஜ உலகிற்கு வந்தவளாய் “ஓம் அம்மா நல்லா நேரம் போயிற்றுது. வாங்க நீங்களும் படுங்க” என்று தாயையும் அழைத்துக் கொண்டு தூங்கச் சென்றாலும் மனதில் ஒருவித படபடப்பு அவளுக்கு. நாளை என்ன நடக்குமோ? என்று. திருமணம் முடியும் வரை இதே நிலையே தொடரும் என்பதை அறிவார் யாருமில்லை.

**நா.சுமதி**
திட்டமிடல் கிளை
பிரதேச செயலகம்
குச்சவெளி



# சுற்றாடலைப் பாதுகாப்போம்

சூழலைக் காத்திட நாம் வாஞ்சிப்போம்
சூழ்ந்தே யாவரும் அயலைப் பெருக்கிடுவோம்!
சூட்சுமமாக அனைவரும் அணி வகுப்போம்
சுழன்றே விரைவாகச் சுத்தம் செய்திடுவோம்!

நித்தமும் சூழலை மனதில் இருத்திடுவோம்
நிதமும் சுய  சுத்தம் பேணிடுவோம்!
நிழல் தரும் மரங்களை நாட்டிடுவோம்
நில அழுக்கினைக் கூட்டுப்பசளை ஆக்கிடுவோம்!

பொலித்தீன் பாவனையை சூழலில் நீக்கிடுவோம்
பொல்லா அனோபிலிஸை கூண்டோடு விரட்டிடுவோம்!
பொக்கிசமாம் இயற்கைச் சூழலை – நாம்
பொதுப்பணி செய்தே காத்திடுவோம்!

சுகாதாரப் பரிசோதகர் தரும் ஆலோசனையில்
சுகநலம் பேண நாம் எழுந்திடுவோம்!
தரணியில் பிளாஸ்ரிக் பொருள் அகற்றிடுவோம்
தரமான காற்றினை தினமும் உள்ளெடுப்போம்!

பசும்மூடு பயிர்களை வளர்த்திடுவோம் – பார்
அழிக்கும் மண்ணரிப்பைத் தடுத்திடுவோம்!
மரங்களை அழிப்பதை நாம் நிறுத்திடுவோம் –மழை
வீழ்ச்சிதனை பாரினில் உயர்த்திடுவோம்!

மாறும் சுற்றுச் சூழ்நிலையில் – தினம்
மாசுகள் செய்து மண்டலத்தைக் கெடுக்காமல்..!
மாணவர் அணியணியாய் திரண்டிடுவோம்
மாநிலம் மகிழ ஒன்றுபட்டு செயற்படுவோம்!

**சு. ஸருகேந்திரா**
மாணவன்
சலப்பையாறு, கும்புறுபிட்டி கிழக்கு

# சூழல் பாதுகாப்பு

நாம் வாழும் சூழல் மிகவும் சுத்தமாக இருத்தல் வேண்டும். தற்கால போக்கினால் சூழல் மிகவும் பாதிப்படைந்து வருகின்றது. எம்மைச் சூழவுள்ள சூழலைப் பாதுகாத்தல் எம் அனைவரதும் கடமை எனக் குறிப்பிடலாம். குறிப்பாக உற்று நோக்கினால் சுத்தமான காற்றினை விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை இன்று காணப்படுகின்றது. தொழிற்சாலைக் கழிவுகள் வளிமண்டலத்தில் கலப்பதால் சுத்தமான காற்று அசுத்தமடைகின்றது. இதனால் உலகில் உள்ள சகல உயிரினங்களும் அசுத்தமான காற்றினையே சுவாசிக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

இதனால் மனித சுவாசத்திற்கு தீங்கு இல்லாத வாயுக்களை மட்டுமே வளிமண்டலத்தில் கலக்கச் செய்ய வேண்டும். மேலும் வளிமண்டலத்தினை தூய்மையடையச் செய்ய மரங்களை நடுதல் வேண்டும். மரங்கள் தான் மனிதனுக்குத் தேவையான ஒட்சிசன் வாயுவை உற்பத்தி செய்கின்றது. எனவே மரநடுகையை நாம் பரவலாக்க வேண்டும். அதற்கு மாறாக நாமோ காடுகளை அழித்துக் கொண்டு இருக்கின்றோம். இதன் மூலமாக எமது ஆயுட்காலத்தை நாமே குறைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம். நாம் வாழும் சூழலைப் பாதுகாத்தால் தான் எமது எதிர்காலச் சந்ததியினராவது நிம்மதியாக வாழ்வார்கள்.

தற்காலச் சந்ததியினர் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினையாக சூழல் பாதுகாப்புப் பிரச்சினை காணப்படுகின்றது. தற்போது போதைப் பொருள் பாவனையினாலும் சூழல் இன்று பாரியளவில் மாசடைந்து வருகின்றது. இந்த நிலைமை தொடர்ந்து சென்றால் நாடே சுடுகாடாக மாறிவிடும்.

நாம் வாழத் தேவையான அம்சங்களைக் கொண்டிருப்பது சூழலாகும். கண்ணுக் கெட்டிய தூரத்தில் பசுமையான வயல்வெளிகள், சுத்தமான காற்று, சுகாதாரமான உணவுகள், எல்லையில்லா மகிழ்ச்சி, பாய்ந்து ஓடும் நீர்வீழ்ச்சி

இப்போதெல்லாம் இவற்றை காண்பதே மிகவும் கடினமாக உள்ளது. தற்கால மனிதன் விஞ்ஞானத்தை நோக்கி வளர்கின்றான். அதனால் சூழலை பாதுகாக்க மறந்து போனான்.

நீர் நாம் உயிர்வாழ தேவையான முக்கியமான ஒன்றாகும். இதுவும் மாசடைந்து கொண்டே வருகின்றது. ஆறு, குளம், நீரோடைகள், கடல் என்பவற்றின் அழகினை இப்போது காண முடியாமல் உள்ளது. நாட்டில் தொழிற்சாலைகளின் அதிகரிப்பினாலும் கட்டுமானத்துறையின் விஸ்தரிப்பினாலும் முறையற்ற கழிவகற்றல் நடைபெறுகின்றது. இதனால் நீர்நிலைகள் பெரிதும் பாதிப்படைகின்றன. சீமேந்துக் கழிவுகளாலும் தொழிற்சாலைக் கழிவுகளாலும் நீர்நிலையில் உள்ள உயிரினங்கள் இறப்பதனால் நீர்நிலைகள் மாசடைவதுடன் அவை பாவனைக்கு உதவாததாக மாற்றமடைகின்றது. இதனால் வரட்சி, நீர்ப்பற்றாக்குறை, பல்வேறு ஒவ்வாமை நோய்கள் என்பன ஏற்படுகின்றன. எனவே எதிர்காலத்தின் தேவையை அறிந்து சூழலின் ஒரு அங்கமாகிய நீரினைப் பாதுகாப்பது எமது பாரிய கடமையாகும்.

சூழலைப் பாதிக்கும் மற்றொரு காரணி காடழிப்பாகும். நாட்டில் உள்ள இயற்கை காடுகளை அழித்து கட்டிடங்கள், சுற்றுலா விடுதிகள், போக்குவரத்து விஸ்தரிப்பு போன்ற நவீனமயமாக்கல் செயற்பாடுகளை மேற்கொள்வதன் காரணத்தினால் மழைவீழ்ச்சி குறைவடைதல், காட்டு விலங்குகள் வாழிடம் அற்றுப் போதல், காட்டுவளம் அற்றுப் போதல், மூலிகைச் செடிகள் அழிவடைதல், நம் நாட்டுக்கே உரிய அரிய வகைத் தாவரங்கள், விலங்குகள் அழிவடைதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இதன் காரணத்தினால் சூழல் பாதிப்படைகின்றது.

**A. அபீரா**
தி / முஹமதியா வித்தியாலயம்
இக்பால் நகர்

# களிகம்பாட்டம்

நாட்டார் இலக்கிய வடிவங்களுள் இதுவும் ஒன்று. இதனை பொல்லடி கம்படி கோலாட்டம் தாண்டியா என பல்வேறு பெயர் கொண்டழைப்பர். பாரம்பரிய செல்வாக்கு மிக்க இக்கலை வெவ்வேறுபட்ட மாகாணங்களின் வித்தியாசமான கலையம்சங்களைக் கொண்டு ஆடப்படும் ஆட்ட வகைகளுள் கோலாட்டமும் ஒன்று பல்வேறு நிறங்களை கொண்டு தீட்டப்பட்ட களிம்புகளைக் கொண்டு தாளத்திற்கும் இசைக்குமேற்ப ஒன்றுடன் ஒன்று தட்டிக் கொண்டே ஆடும் இவ்வாட்டம் நாட்டார் கலையின் ஒரு முதிர்ந்த நிலையாகும். கைகளில் கோல்களை வைத்து ஆடும் அதிகமான நாட்டார் கலைகளில் இதற்கு தனித்துவமான இடமுண்டு.

பொதுவாக திருமணவீடு, கத்னா வைபவ வீடு, பொது நிகழ்வுகள், விழாக்கள், வரவேற்பு நிகழ்வுகள் போன்ற வைபவங்களில் இது விமர்சையாக அரங்கேற்றப்படுகின்றன. 19ம், 20 ம் நூற்றாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் 30-50 வயதிற்குட்பட்ட ஆண்களினாலே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தற்போது இளைஞர்கள் சிறுவர்கள் பெண்கள் போன்றோர்களாலும் ஆடப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் தமிழ் நாட்டில் ஆடப்படும் கோலாட்டத்திற்கும் இடையில் வேற்றுமைகள் அதிகமுண்டு. இடம் நேரம் காலம் சூழல் சந்தர்ப்பங்களை வைத்து சில உட்புகுத்தல்களையும் இடைச்செருகல்களையும் இது அங்கீகரித்திருக்கிறது.

இதனை கற்பிப்பவர் குரு அண்ணாவி என்று அழைப்பர். இறக்குமதி செய்யப்பட்ட இக் கலைக்கு புது வடிவம் கொடுத்து காலத்திற்கேற்ப இற்றைப்படுத்தி பாதுகாத்து வருகின்றனர் அண்ணாவிமார். தரு, விருத்தம், சந்தம், அசைவு, தாளத்திற்கேற்ப அசையும் தன்மை நேர முகாமைத்துவம் போன்ற இன்னோரன்ன இக் கோலாட்டத்தில் கையாளப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் கையாளப்படும் கோலாட்டத்திற்கும் ஏனைய

மாகாணங்களில் கையாளப்படும் கோலாட்டத்திற்கும் இடையில் அநேக வித்தியாசங்கள் உண்டு. கிராமத்து சாயல் கொண்டு இயற்றப்படும் பாடல்கள் அதன் கரு பின்னணி முன்னோர்களின் வாழ்வியல் பழக்க வழக்கங்கள், மக்களை கவரும் பாங்கு சூழல் போன்ற அம்சங்கள் ஏனைய மாகாணங்களில் கையாளப்படாதிருப்பது அதன் வித்தியாசமாகும் எமது பிரதேசங்களில் ஒரு குழுவில் எட்டு பேர் கொண்டு ஆடப்படுகிறது.

ஏனைய பிரதேசங்களில் பத்து அல்லது பதினாறு பேர் கொண்டு ஆடப்படுகின்றது. இதன் போது இதிலுள்ள தவறுகள் அதிகமாக வெளிக்கொணரப்படுவதோடு ஆட்டமும் இன்பகரமாக அமையாது போகின்றது. இதனாலேயே இயற்கை நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது சினிமா உலகிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

புல்மோட்டைக்கு இக்கால தண்ணீரூற்றுப் பகுதியிலிருந்து வருகை தந்ததாக கூறப்பட்ட போதிலும் தண்ணீரூற்றுக் கோலாட்டத்திலிருந்து முற்றிலும் இக் கோலாட்டம் வேறுபட்டுச் செல்கிறது. அதே போன்று மட்டக்களப்பு மாவட்ட கோலாட்டத்திலிருந்து எமது கோலாட்டம் வேறுபட்டு செல்கிறது. சுமார் இருநூறு ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட இக் கலைப்படைப்பு பல பரிமாண மாறுதல்கலையும், பல சுவையான கலையம்சங்களையும் கொண்டு உயிர் வாழ்வது இதன் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இதற்கு பயன்படுத்தபடும் களிகம்பு காட்டு மரங்களில் ஒன்றான பன்னை மரத்திலிருந்து பெறப்பட்டதாகும். அதிக ஒலியெழுப்பக் கூடியதும் நீண்ட கால பாவனைக்கு உகந்ததுமான இக்கம்பை வெட்டி வந்து ஒரு முல நீளமானதாகவும் ஒரு அங்குல விட்டங்கொண்டதாகவும் சம அளவாக்கி பயன்படுத்துவர்.

கோலாட்டத்தில் இரு பகுதிகள் உண்டு. ஒன்று ஆட்டம் மற்றையது பாட்டு. அண்ணாவிமார் சமூக நிகழ்வுகள் தேவைகள் என்பவற்றை உணர்ந்து வடிவம் அமைப்பர். இதில் கேள்வி கேட்டு விடையளிக்கும் பாங்கு அதிகம் இடம் பெறும். இதனால் இக் கலைப்படைப்பு மணித்தியாலக் கணக்கில் இடம் பெறுவதோடு மக்கள் சுவாரசியமாக கூர்ந்து உற்று நோக்கி மகிழ்ச்சியடையும் வாய்ப்பையும் பெறுவர். உதாரணமாக தங்கம் என்ற பாடல் பெண்களைப்

புகழ்ந்து வர்ணனை செய்து பாடுவது வழக்கம். ஒரு பெண் இவ் அவைக்கு வந்தால் அவளை திகைப்பில் ஆழ்த்தும் வகையில் பாடல்களை உடன்கட்டிப் பாடும் மரபு அண்ணாவிமாருக்கு உண்டு. இதுவும் அதன் சிறப்புக்கு முக்கிய காரணம்.

நீண்ட கால பழைமை வாய்ந்த இக் கோலாட்டமானது பல அண்ணாவி-மார்களை கொண்டிருந்தாலும் அவர்கள் விட்டுச்சென்ற பணியினை அதனைப் பின் தொடர்ந்து வந்தவர்கள் நடைமுறைப்படுத்தி செய்து வருகின்றனர். இவ் வகையில் அநேகமானவர்கள் இறையடி சேர்ந்தாலும் தற்போதுள்ளவர்கள் புல்மோட்டைக்கு உள்ளிருந்த இளைஞர்களுக்கு இக் கலைப் படைப்பை வளர்த்து வருகின்றனர். புலவர் செய்யித் அலி அண்ணாவியார் சீனி முகம்மது சாகுல் கமீது ஆகியோர் செய்து வருகின்றனர். இதனைத் தொடர்ந்து அபூதாலிப், அப்துல் மனாப் லுக்மன் ஹகீம் இஅபுல் காசிம் செய்து வருகின்றனர். இவர்களைத் தொடர்ந்து இவர்களின் சீடர்களான ஏ.கே.பாகித், வை.எஸ்.ஏ.காதர் ஆகியோர்களும் புனரமைத்து வருகின்றனர்.

பாடசாலை மட்டத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கே.எம்.இஹ்கான், அஸ்வர் ஆகியோர் ஆசிரியர்களுடன் ஒன்றித்து பயிற்றுவித்தனர். ஆசிரியர் ஏ.சி.அமீன் என்பவராலும் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டது. தற்போது இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான இக் கலைப்படைப்புக்கு ஆசிரியர் ஏ.சி.எம்.அஸ்ரப் அவர்கள் பாடசாலை, வலய, மாகாண, தேசிய மட்டங்கள் என்பவற்றிற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்தி பயிற்றுவித்து வெற்றி பெறச் செய்வதோடு தேசிய மட்டத்திலும் விருதுகளையும் ஈட்டிக்கொடுத்த பெருமை இவரைச் சாரும். தற்போது பாடசாலை கற்பித்தலிலிருந்து ஓய்வு பெற்றாலும் இவரது பணி தொடர்ந்தும் சென்று கொண்டிருக்கிறது.

நான்கு சோடி நபர்களை உள்ளடக்கிய இவ் அமைப்பில் சோடி அல்லது தன்னாள் என்பது முக்கியமானதொன்று இது வட்டமாக ஆடப்படும் ஆட்டம் என்பதால் நடுவில் உரல் போன்ற ஒன்றை வைத்து ஆடுவர் அல்லது அதில் அண்ணாவி உக்கார்ந்து பாடுவார்.

புல்மோட்டைப் பிரதேசத்தில் 24 வகையான கம்படிகள் காணப்பட்டாலும் 10

முறைமை தான் ஆடப்பட்டு வருகின்றன குறிப்பிட்ட கம்படி முறைமைக்கு அதே தரு தளை மற்றும் பாட்டுத்தளை ஒத்த பாட்டுக்களை படிக்கின்ற போது தான் கோலாட்டத்தை சீராக கொண்டு செல்ல முடியும். முதலாவது அனைவரும் தரு சொல்லி ஆரம்பிப்பர். அந்த தாளத்திற்கு ஏற்பவே பின்னால் வருகின்ற பாட்டு அமையும்

அத்துடன் இப்பிரதேசத்தில் பின்பற்றப்படுகின்ற கம்படி வகைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம் கிறுதமல்லி பறவைப்பாட்டு காசிம் படைப்போர் காவல் பாட்டு வருவாரடி அன்னம் வேத நாயக்கர் பள்ளு பதினாறு மாதம் முதலங்கி என வகைப்படுத்திக் கொண்டே போகலாம்

எனவே நாட்டார் பாடல் இப்பிதேசத்தில் தனித்துவம் மிக்க பண்புகளுடன் வளர்வதற்கு கம்படி மிகுந்த செல்வாக்கு செலுத்தியிருக்கிறது கம்படிக்கென்று தனியாக பாக்களை உருவாக்குவது ஒரு புறம் இன்னொரு புறத்தில் கம்படித்துக்கொண்டிருக்கின்றவர் தானாக ஒரு சம்பவத்தை கற்பனை செய்தோ அல்லது நடைமுறை சம்பவத்தை வைத்தோ பாட்டுக்களை புனைந்து பாடுவார் ஏராளமான பாட்டுக்கள் அழிந்து விட்டாலும் ஒரு சில பாட்டுக்கள் இன்னும் நடைமுறையில் உள்ளன.

ஆகவே அழியா வரம் பெற்ற இக் கலைப்படைப்புக்கள் இனி வருகின்ற ஏழேழு ஜென்மத்திற்கும் உயிர்த்துடிப்புடன் நின்று சாகா வரம் பெறும் என்பது திண்ணம்.

**A.C.M. அரப்**
ஓய்வு பெற்ற ஆசிரியர்
புல்மோட்டை-03



# நிலாவெளியூர்

“சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறந்தானூங்கும் ஆக்கம் எவனோ உயிர்க்கும்”

எனும் வள்ளுவப் பெருந்தகையின் குறட்பாவிற்கு அமைய கட்டுக்குளம் பற்று கிழக்கே கடல் அலைமோத வயலும் வயல் சார்ந்த இடமுமான நிலாவெரிப் பெண்ணால் ஆளப்பட்ட ஓர் இடம் நிலாவெளி ஆகும். இப் பெயர் வர பலரும் பல்வேறு கருத்துக்களை கூறினாலும் திரியாயிலிருந்து திருக்கோணசப்பெருமானின் உற்சவ காலத்தில் இப் பெருமானின் அருள் பெற வரும் குச்சவெளி பிரதேச மக்கள் திரியாயிலிருந்து திரிகள் கொண்டு பாத யாத்திரையாக செல்லும் போது நிலாவின் ஒளி மட்டும் பகலவனை போன்று காட்சியளிக்கும் ஓர் இடம் ஆகையால் நிலாவொளி எனப்பட்டதாகவும் அது தற்போது மருவி நிலாவெளியாக உள்ளது என்பது நான் அறிந்த கதை.

வந்தோரை வாழ வைக்கும் சிறப்பிடம் ஏனெனில் இக்கிராமத்தின் தனித்துவம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களும் ஒருங்கே பெற்று அமைந்துள்ளது. பாரம்பரிய கலைகளை தெரிந்து கொள்ளக் கூடியதும் சமூக ஆர்வலர்கள் பலரை உருவாக்கிய பெருமை இம் மண்ணிற்கு உரித்தாகும். இக்கிராமத்தின் ஜீவனோபாயம் மேட்டுநிலப் பயிர் செய்கையாகும். இப்பயிர் செய்கையால் தத்தமது சுய தொழில்கள் மூலம் சமூக அந்தஸ்தை பேணக் கூடிய ஓர் அமைவிடம். இக்கிராமத்தில் பிரதான இந்து வழிபாட்டு தெய்வங்களாக சித்தி விநாயகர், மாரியம்மன், பத்தினி அம்மன் ஆகிய கடவுளரின் ஆலயங்கள் காணப்படுகின்ற அதே வேளை பிற மதமாகிய கிறிஸ்தவத்தை பொறுத்த வரையில் புனித சூசையப்பர் தேவாலயமும் மெதடிஸ் மிஷன் தேவாலயமும் இக்கிராமத்தை மெருகூட்டி நிற்கிறது. சுற்றுலாப்பயணிகள் விரும்பி வரும் இடம் இதுவாகும்.

‘சிற்றின்பம் வெப்கி அறன் அல்ல செய்யாரே மற்றின்பம் வேண்டுபவர்’ எனும் குறப்பாவிற்கு இணங்க வெளிநாட்டு மோகத்திற்கு அடிபணியாது எமது மக்கள் வாழும் சந்தர்ப்பங்கள் பல உள்ளன. இதனால் இக்கிராமம் அந்நிய

செலாவணியை நாட்டிற்கு பெற்றுக் கொடுப்பதில் பெரும் பங்களிப்பினை ஆற்றி வருகின்றது. கடந்த கால யுத்தத்தின் போது தமது வாழ்விடங்களை இழந்து நிர்க்கதி அற்று நின்ற வேளை இவ்வூர் மண் அனைவரையும் அரவணைத்து தத்தம் கால்களை ஊன்றி மேலெழக் காரணமாய் அமைந்தது. எத்துன்பம் கால்களை வருடினாலும் அதனை தகர்த்து எறிந்து தற்துணிவுடன் செயற்படும் ஆளுமையை வளர்க்கும் கவின் நிலையமாக இக்கிராமம் விளங்கியதென்றால் மிகையல்ல இக்கிராமத்தின் வளர்ச்சியில் சமூகமட்ட அமைப்புக்களான இளைஞர்கழகம், விளையாட்டுகழகம், விவசாய சம்மேளனம், கிராமிய அபிவிருத்தி சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், மாதர் கிராமிய அபிவிருத்தி சங்கம், ஆலய பரிபாலன சபைகள், அறநெறிப் பாடசாலைகள் என்பன காணப்படுகின்றன.

1991-1998 காலப்பகுதியின் கல்வி வளர்ச்சியை மேலெழச் செய்த பெருமை ஓர் பெண்ணைச் சார்ந்தே அமைந்தது. அமரர் திருமதி .வள்ளிநாயகி பூபாலசிங்கம் அவர்கள் இன்றைய கைலேஸ்வரா கல்லூரியின் அன்றைய நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றிய போது முற்று முழுதாக பாடசாலை வளாகம் இராணுவ படைப்பிரிவின் கண்காணிப்பில் அமையப் பெற்ற போது தன்னுடைய தற்துணிவுடன் ஒவ்வொரு விடியற் பொழுதும் பாடசாலையை தன்னுடைய பணிக் குழாமுடன் செயற்படுவது நினைத்து பார்க்க வேண்டிய சிறப்பம்சமாகும் அன்று அந்நிலையில் அதிபர் துணியாவிட்டால் இன்றைய கைலேஸ்வரா கல்லூரி கேள்விக்குட்படும் வாய்ப்பே காணப்படும். இதே போன்று எமது கனிஷ்ட பாடசாலையான தி/றோ.க.த.க. பாடசாலையை அன்று நிர்வகித்த அதிபர் தி.கு.விஜெயரட்ணம் அவர்கள் அகதி முகாமிற்கு மத்தியில் பாடசாலையை வழிநடத்தியமை சிறப்பு பெறுகிறது. நிலவின் வதனம் எழிலைச் சிந்த நீலக்கடலின் கிருஷ்ண கானத்திற்கு மத்தியில் எமது நிலாவெளியூர் அழகிய வனப்புடன் என்றென்றும் மக்களை அரவணைத்து வாழிய வாழியவே … …

**T. சதானி**
உயர்தர மாணவி
நிலாவெளி

# சமுர்த்திக் காசு

எழுபத்து இரண்டு வயது பூர்த்தியாகிய போதும் முதுமையை வென்று வாழும் தேகம் கண்ணம்மாவினுடையது வைரம் பாய்ந்த உடலையும் கீறிப்பார்க்கும் அந்த பனி பொழியும் இரவில் மறுநாள் காலையில் செய்து முடிக்க வேண்டிய கடமைகளை எல்லாம் விரைவாகச் செய்து முடிப்பதில் கருத்தாய் இருந்தாள். நாளை காலையை நினைத்துப் பார்க்கையில் நெஞ்சுக்குள் ஏதோ பொறுத்துக் கொண்டது போல அவளுக்கு இருந்தது.

காலையில் நேரத்துக்கு எழும்ப வேண்டும் என்று மனதுக்குள் நினைத்தவளாக சில நேரங்களில் அயர்ந்து தூங்கி விட்டால் என்ன செய்வது என யோசித்து தனது மேசையின் மீது இருந்த அந்த பழைய மணிக்கூட்டைக் கையில் எடுத்து காலை 4.00 மணிக்கு அலாரம் வைத்து விட்டு தூங்கப் போனாள். கூலி வேலைக்குச் சென்று வரும் உடற் களைப்பு அவருக்கு தூக்கத்தை விரைவாகவே கொண்டு வர அயர்ந்து தூங்கிப் போனாள். காலை 4.00 மணிக்கு அலாரம் அடிக்க தொடங்க திடுக்கிட்டு எழுந்த கண்ணம்மா பம்பரம் போல சுழலத் தொடங்கினாள். விறகு அடுப்பில் தண்ணீர் கொதிக்க வைத்து விட்டு வீட்டு முற்றம் கூட்டி வீடு கூட்டி தனது வளர்ப்பு பிராணிகளான கோழி, ஆடுகளுக்கு தீன் வைத்து விட்டு தனது காலைக்கடன்களை முடித்து கொண்டு முகம் கழுவி வீட்டிற்குள் வர நேரம் 4.45ஐ தாண்டி விட்டது.

அவசரமாக தேனீர் ஊற்றிக் குடித்தவள் கிணற்றிலிருந்து நீர் அள்ளி தான் நட்டு வைத்துள்ள செடி கொடிகளுக்கு நீர் ஊற்றினாள் பின்னர் தனது மாடு கன்றுகளை அவிட்டு தூரத்திற்கு துரத்தி விட்டு வீட்டிற்குள் வர நேரம் 6.30 ஆகி விட்டது அவளது 60 வது பிறந்த நாளன்று கணவன் பரிசளித்த நீல நிற கொட்டன் சாறியை பெட்டிக்குள் இருந்து எடுத்து சுற்றிக் கொண்டாள். முனியப்பன் இறந்து எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன. பிள்ளைகள் மூவரையும் திருமணம் செய்வித்து அனுப்பி விட்ட கண்ணம்மா இப்போது தனிமரமாய் நிற்கிறாள்.

சேலை உடுத்தி வெளிக்கிட்ட கண்ணம்மா தனது கைப்பையை எடுத்துக் கொண்டு கேற்றுக்கு வர 7.00 மணியாகி விட்டது. கெதியில போகணும் அங்க ஆக்கள் கூடினால் பிறகு இண்டைக்குக் கிடைக்காது இன்னொரு நாளைக்கு அலைய வேணும் என மனதுக்குள் எண்ணியவளாக 2 கிலோ மீற்றர் தொலைவிற்கு நடக்க தொடங்கினாள். 'கடவுளே எனக்கு நம்பர் கிடைச்சிர வேணும் ; என்று மனதுக்குள் துதித்துக் கொண்டவளாக வேக வேகமாக நடந்தாள். வங்கியை நெருங்க நெருங்க மனதுக்குள் பரபரப்பு அவளை தடுமாற வைத்தது. தொலைவில் வங்கி இருப்பது தெரிந்ததும் மனதுக்குள் கொஞ்சம் நிம்மதி வர தொடங்கியது. ஏனெனில் முன்னுக்கு வரிசையில் ஆட்களைக் காண முடியவில்லை 7.45 அளவில் வங்கிக்கு முன் கண்ணம்மா வந்து சேர அவளுக்கு முன் மேலும் இருவர் வந்திருந்தனர்

அவர்களில் ஒருவர் 'அம்மா லைனில் நிப்பம் "பிறகு வாறவங்கள் வந்து இடையில நின்றிடுவாங்கள்" என்று சொல்ல அம் மூவரும் லைனில் நிற்கத் தொடங்க படிப்படியாக சனக்கூட்டம் வங்கிக்கு முன் வந்து நிறையத் தொடங்கியது. கண்ணம்மாவுக்கு இப்போது மனதுக்குள் சந்தோசம் வரத் தொடங்கியது. சமுர்த்திப்புத்தகம் அடையாள அட்டை எல்லாம் கொண்டு வந்தேனோ தெரியாது என எண்ணியவளாக கைப்பையைத் தடவினாள். ஒரு வேளை எல்லாமே அதற்குள் இருந்தது.


8.20ஐ தாண்டிவிட்டது அலுவலர்கள் யாரும் வரவில்லை. 8.25 அளவில் ஒருவர் பின் ஒருவராக அலுவலர்கள் வந்து வங்கியைத் திறந்து தமது வேலைகளை தொடங்கினர். வங்கி அலுவலர் ஒருவர் சிவப்பு நிற சிலிப்போடு வந்து வரிசையில் நின்றவர்களுக்கு அதனைக் கொடுக்கத் தொடங்கினார். "எல்லாத்தையும் சரியா நிரப்பி கையெழுத்து வைச்சுப்போட்டு சமுர்த்திப்புத்தகத்தில் ஐடண்டிக்காட் எல்லாத்தையும் ஒண்டா வைச்சு அடுக்குங்கோ" என்று சொன்னார்.

கண்ணம்மா எழுதப்படிக்கத் தெரியாத காரணத்தால் அருகில் நின்ற ஒரு பிள்ளையிடம் கொடுத்து நிரப்பிக் கொண்டு சென்று அடுக்கிவிட்டு வந்து போடப்பட்டிருந்த ஒரு கதிரையில் அமர்ந்து மூச்சு வாங்கினாள் "அப்பாடா ஒரு மாதிரி ஜெயித்துட்டோம்" என்ற உணர்வு அவள் மனதுக்குள் உற்சாகத்தை

ஏற்படுத்தியது. கதிரையில் இருந்த கண்ணம்மாவை நோக்கி வந்த அவளது பிரிவு உத்தியோகத்தர் "அம்மா நிறைய மாசம் நீங்கள் குழுக்காசு கட்ட இல்ல. பிறகு சந்திச்சுப் போட்டு போங்க" என்று கூறிச்சென்றார். குழுக்காசுக்காக அவள் முந்தானையில் முடிந்து வைத்திருந்த அந்த ஐநூறு ரூபா நோட்டுக்குத்தான் தெரியும் தான் எத்தனை நாளாக சிறையில் இருக்கிறோம் என்று.

கண்ணம்மா... கண்ணம்மா... என்ற குரல் கேட்டு திடுக்கிட்டாள் எழுந்து உள்ளே செல்ல சமுர்த்திப்புத்தகமும் 5000/- ரூபா பணமும் அவளுக்கு கொடுக்கப்பட்டது. "அம்மா காசை எண்ணிப் பார்த்துக் கொண்டு போங்க" என்று காசு கொடுக்கும் பெண் கூற "சரியம்மா" என்றவளாக கண்ணம்மா வங்கியை விட்டு வெளியில் வர நேரம் 10.30 ஐத் தாண்டியிருந்தது.

"ஐயோ நேரம் போயிட்டு ஆடுகளை மேச்சலுக்கு கொண்டு போகணும்" என்று எண்ணியவளாக கண்ணம்மா விரைந்தாள் வீடு நோக்கி...



**ச. கோபிரமணன்**
பிரதேச செயலகம்
குச்சவெளி

# நீரின் முக்கியத்துவம்

எமது அன்றாட வாழ்வில் நாம் உயிர் வாழ்வதற்கு மிகவும் முக்கியமான ஓர் காரணியாக நீர் அமைகிறது இது பஞ்சபூதங்களில் ஒன்றாகும். 'நீர் இன்றி அமையாது உலகுகளின் லான் இன்றி அமையாது' என்பது வள்ளுவர் வாக்கு நீரினால் பல பயன்கள் காணப்படுகின்றன. தண்ணீர் குடிப்பதால் எமது உடலில் உள்ள பல நோய்கள் அற்றுப்போகும். எமது உடலில் போதுமான அளவு நீர் இல்லை என்பதை உணர்த்தும் அறிகுறிகளும் காணப்படுகின்றன.

நீர் இன்றி அமையாது உலகு உலகம் என்றாலே மனிதர்கள், பறவைகள், விலங்குகள், மரங்கள் இதெல்லாம் இணைவதால் தான் ஓர் இயற்கையான உலகம் உருவாகிறது. இதற்கெல்லாம் அடிப்படை அத்திவாரமாக நீர் அமைகிறது. நீரின்றி சமைக்க முடியாது நமது சொந்த அன்றாட தேவைகளை நிறைவேற்ற முடியாது. நாம் சுத்தமாக இருக்க முடியாது இதிலும் மிக முக்கியமானது மின்சாரம், விவசாயம் நீரின்றி மின்சாரம் பெறப்படமுடியாது விவசாயம் செய்ய முடியாது எமது வாழ்வில் நீரின் பங்களிப்பு அதிகமாக காணப்படுகின்றது. இதனால் மார்ச் மாதம் 22ம் திகதி உலக நீர் தினமாக கொண்டாடப்படுகிறது.

நீர் அருந்துவதால் எமது உடலில் உள்ள நோய்கள் அல்லது ஏற்படவிருக்கும் நோய்களை தடுக்கிறது. தற்போதைய சமூகத்தில் நீரை எவரும் சரியாக அருந்துவது இல்லை. ஓர் மனிதன் தினமும் 3 லீட்டர் நீர் குடிப்பதை வழக்கமாக்கி கொள்ள வேண்டும். அதிலும் கோடை காலங்களில் 4-5 லீட்டர் குடிப்பது உடலுக்கு ஆரோக்கியத்தையும் உற்சாகத்தையும் தருகின்றது. இவ்வாறு போதிய அளவு நீரை அருந்துவதால் உடலில் உள்ள கழிவுகள் அகன்று தசைபிடிப்பு, மலச்சிக்கல், தலைவலி, மூட்டு உராய்வு போன்ற நோய்களில் இருந்தும் பாதுகாக்கிறது போதியளவு நீரை அருந்துவதால் உடல் வெப்பத்தையும் சீராக வைத்து கொள்ள முடியும்.

பொதுவாக பெண்கள் தமது முகத்தையும் உடலமைப்பையும் அழகாக வைத்திருக்க வேண்டுமென்று ஆசை கொள்வார்கள். இது ஒரு பரவலான

விடயம் தான் இதற்காக செயற்கையான முறையில் தங்களை அழகுபடுத்த முயற்சிக்கிறார்கள். கிறீம், மாத்திரை, ஊசி மூலம் தமது முகத்தின் அழகையும் உடம்பின் அழகையும் உடல் எடையை குறைக்கவும் முயற்சி செய்கிறார்கள். இவற்றை அவர்கள் வாழ்க்கையின் பாவனையில் கொண்டு வருகின்றார்கள். இதனால் அவர்களுக்கு ஏற்படவிருக்கும் பின் விளைவை அறிவதில்லை. இளம் வயதில் இவற்றை பாவிப்பதால் அரிவை, தெரிவை பருவங்களின் போது வயது முதிர்ந்தவர்கள் போல் தோற்றம் அளிப்பர். இதனால் அவர்களின் வாழ்க்கையில் பாரிய அசௌகரியத்தை சந்திக்க நேரிடும். இவ்வாறான பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமானால் போதியளவு நீர் அருந்த வேண்டும். எல்லா பிரச்சனைக்கும் தீர்வு நீர் அருந்துவதா? என்று உங்களுக்குள் ஓர் கேள்வி எழலாம். போதியளவு நீர் குடிப்பதால் முகத்திலுள்ள அழுக்குகளை அகற்றி பருக்கள் வருவதையும் தடுக்கும். உடலில் நீர் குறைந்தால் முகச்சுருக்கம் ஏற்படும். இதனால் போதியளவு நீர் அருந்துவதால் முகச்சுருக்கம் அற்று போகும். உடலை கட்டுப்பாடாக வைத்திருக்கும் உடல் எடையை குறைக்கும் இதனால் எமது உடல் மற்றும் முகம் அழகாய் மாறுகின்றது.

மனித உடலில் 60% - 70% வரை தண்ணீரால் உருவாக்கப்பட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்த விடயம். எனவே நாம் தினமும் போதியளவு நீர் குடிக்கவில்லை எனின் எமது உடலில் உள்ள இரத்தத்தில் 8% நீர் குறைகிறது. இதனால் இரத்தம் உறைதல், பக்கவாதம், மாரடைப்பு, இரத்த அழுத்தம் அதிகரித்தல் போன்ற நோய்களுக்கு வழி வகுக்கும். மேலும் போதியளவு நீர் குடிக்கவில்லை எனின் திசு மற்றும் செல்களில் உள்ள இடை வெளியில் இருந்து 26% நீர் குறைந்து சிறுநீர்கற்கள் குறைந்த நோயெதிர்ப்பு சக்தி அமிலத்தன்மையின் அளவை உயர்த்துதல் போன்றவற்றிற்கும் வழிவகுக்கும். நமது உடலில் போதுமான அளவு நீர் இல்லை என்பதை உணர்த்தும் அறிகுறிகள் வாய் வரண்டு போகும் தோல் உலர்ந்த தோற்றத்தை அளிக்கும், அதிகமாக தாகம் எடுக்கும், வாய் வரண்டு போகும் போது நீரை குடித்தால் வாய் மற்றும் தொண்டையில் உள்ள சலிச்சவ்வுகளில் உராய்வை ஏற்படுத்தி வாயில் உமிழ் நீரை நீண்ட நேரம் தக்க வைக்கிறது. மது பழக்கம் உள்ளவர்களுக்கு அதிகமாக தாகம் எடுக்கும் ஏனெனில் உடலில் உள்ள நீரின் அளவை குறைத்து விடும். கண்கள் வரண்டு போகும் எலும்பு பிணைப்பில் வலி ஏற்படும்.

நீர் மனிதனுக்கு மட்டுமன்றி இவ்வுலகில் வாழும் அனைத்து உயிரங்கிகளுக்கும் உயிர்காக்கும் தெய்வமாக திகழ்கிறது. நீரை வீண்விரயம் செய்யாமல் நீரை சேமிப்போம் ஆரோக்கியமாகவும் உற்சாகமாகவும் வாழ்வோம் நீரின்றி உலகம் அன்றி நீரின் முக்கியத்துவத்தை அறிந்து பாதுகாப்போம் பயன்பெறுவோம்.

M.F. **ருசைக்கா**
தரம் -11
இக்பால் நகர்



# பாண்டவர்களில் ஒருவனான சகாதேவனுக்கு ஜோதிடத்தில் முக்காலமும் அறியும் ஆற்றல் எப்படி கிடைத்தது தெரியுமா?

பாண்டு உயிர் பிரியும் தருணத்தில் மகன்கள் ஐவரையும் அருகே அழைத்து, தான் இறந்தவுடன் தன் உடலை தகனம் செய்யவேண்டாம் என்றும், மாறாக பிய்த்து தின்று விடும்படியும்,அப்படி செய்தால் முக்காலமும் உணரும் ஆற்றல் கிடைக்கும் என்று சொல்லி விட்டு உயிர் துறக்கிறான்.

பாண்டவர்களும் அவர்களது தந்தை பாண்டு சொன்னபடி செய்ய திட்டமிடும் போது அங்கே கிருஷ்ண பரமாத்மா வருகிறார்.

விஷயத்தை கேட்டவுடன் பாண்டவர்களை திட்டுகிறார்.

சாகும் காலத்தில் உங்கள் தந்தைக்குத்தான் புத்தி பிசகிவிட்டதென்றால், உங்களுக்கு என்ன ஆனது?

யாராவது பிணத்தை தின்பார்களா?

வாருங்கள் விறகு எடுத்து வந்து உங்கள் தந்தையை தகனம் செய்வோம் என்று பாண்டவர்களை அழைத்துச் செல்கிறார்.

மிருகங்கள் பாண்டுவின் உடலை இழுத்துச் சென்றுவிடாமல் இருக்க சகாதேவனை காவலுக்கு விட்டுச் செல்கிறார்கள்.

அவர்கள் அப்பால் போனவுடன் சகாதேவன் தன் தந்தையின் இறுதி வாக்கை மீற விரும்பாமல் அவரது சுண்டுவிரலை மட்டும் உடைத்து தின்று விடுகிறான்.

உடனே அவனுக்கு முக்காலத்தையும் உணரும் சக்தி கிடைத்து விடுகிறது.

விறகுகளை கஷ்டப்பட்டு தூக்கி வந்த பாண்டவர்கள் மிகவும் களைப்புடன் விறகுக் கற்றைகளை கீழே போட்டுவிட்டு களைப்பாக அமர்கிறார்கள்.

கிருஷ்ணரும் ஒரு விறகுச் சுமையை தூக்கி வருகிறார்.

ஆனால் விறகுக்கட்டு அவர் தலைக்கு அரையடி மேலாக காற்றில் மிதந்து வருகிறது.

அது மற்றவர்கள் கண்களுக்கு தெரியவில்லை.

சகாதேவனுக்கு மட்டும் அது தெரிகிறது.

கிருஷ்ணரும் மிக களைப்படைந்தவர் போல ஸ்ஸ்ஸப்பா என்று விறகை கீழே போட்டுவிட்டு அமர்கிறார்.

அவரருகில் சென்ற சகாதேவன் , கண்ணா! எல்லோரும் விறகை சுமந்து வந்தார்கள்.

அவர்கள் களைப்பாவது நியாயம்.

உன் விறகுக்கட்டு காற்றில் மிதந்து தானே வந்தது.

நீ ஏன் களைத்தது போல நடிக்கிறாய்? என்று கேட்கிறான்.

உடனே கிருஷ்ணருக்கு விஷயம் விளங்கி விடுகிறது.

சகாதேவனை தனியே அழைத்துச் சென்று அவர் விபரம் கேட்க ,சகாதேவன் தன் தந்தை பாண்டுவின் விரலைத் தின்றதை ஒத்துக்கொள்கிறான்.

எதிர்காலம் தேவ ரகசியம் என்றும்,இறைவன் போக்கில் குறுக்கிடுவது அதர்மம் என்று கிருஷ்ணர் கூறுகிறார்.

சகாதேவனுக்கு தெரிந்த எதிர்காலம் தொடர்பான விஷயங்களை எப்போதும், எவரிடமும் சொல்லகூடாது என்று சகாதேவனிடம் சத்தியத்தை கிருஷ்ணர் வாங்கிக் கொள்கிறார்

தனக்கு முக்காலமும் உணரும் ஜோதிடக்கலை ஆற்றல் தெரியும் என்ற ஆணவத்தால் சகாதேவனுக்கு சற்று கர்வம் அதிகமாகிவிட்டது.

துரியோதனன், பாண்டவர்களை அழிப்பதற்கு, போருக்கான சிறந்த நாளை கணித்துக் கொடுக்கும்படி சகாதேவனிடம் கேட்க, சகாதேவனும் நாளைக் குறித்துக்கொடுக்கிறான்.

அந்தளவிற்கு அவன் ஜோதிடக்கலையில் உண்மையாக இருந்தான்.

போரில் கர்ணன் இறக்கும் தருவாயில் தான், கர்ணன் தன் உடன்பிறந்தவன் என்ற உண்மை அவனுக்கு தெரியவருகிறது.

இதனால் தனக்கு தெரிந்த முக்காலமும் உணரும் ஜோதிடக்கலையில் இந்த உண்மையை தெரிந்து கொள்ளமுடியவில்லையே என்று ஜோதிடத்தில் நம்பிக்கை இழக்கிறான்.

18 நாள் நிகழ்ந்த குருஷேத்திரப் போர் முடிவடைந்த பின் சகாதேவன் கிருஷ்ணனைப் பார்த்து, கிருஷ்ணா! ஜோதிடம் என்பது பொய்தானே என்று கேட்கிறான்.

அதற்கு கிருஷ்ணன் ஜோதிடத்தில் அனைத்தும் அறிந்த நீயே இப்படி கூறலாமா?என்று சொல்கிறார்..

ஜோதிடத்தில் அனைவருடைய பிறப்பு ரகசியமும் என் கணிதத்தில் தெரிந்து கொண்டேன்.

ஆனால் கர்ணன் என் உடன்பிறந்தவன் என்ற ரகசியம் என் ஜோதிட கணிதத்தில் வரவில்லை.

அப்படியென்றால் ஜோதிடம் பொய்தானே கிருஷ்ணா? என்று மீண்டும் கேள்வி எழுப்பினான் சகாதேவன்.

இதை பொறுமையாக கேட்ட கிருஷ்ணன் சொன்னாரு பாருங்க பதில்.

அனைத்தையும் நீ ஜோதிடத்தில் தெரிந்துகொண்டால் பிறகு நான் எதற்கு???

இந்த பதிலைகேட்டவுடன் சகாதேவனுக்கு தூக்கிவாரிப்போட்டது.

அடங்கியது அவன் கர்வம்.

எப்படிப்பட்ட சிறந்த ஜோதிடனாக இருந்தாலும் 99% மட்டுமே தங்கள் கணிதத்திறமையை எடுக்க முடியும்.

மீதி 1% கடவுளின் பிடியில் மட்டுமே!

**ம. புவிதர்சன்**
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
குச்சவெளி



## மூளைக்கு வேலை தரும் புதிர்கள் முடிந்தால் முயன்று பாருங்கள்...

1. நீங்கள் ஒரு சிறைக்கைதி. உங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஒரு சிறிய விளையாட்டை விளையாடுவதன் மூலம் உயிர் பிழைத்துக் கொள்ள உங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. 50 வெள்ளை கோலிகுண்டுகள், 50 கறுப்பு கோலிகுண்டுகள், மேலும் இரண்டு காலி கிண்ணங்கள் உங்களிடம் கொடுக்கப்படுகின்றன. இரண்டு காலி கிண்ணங்களில் இந்த கோலிகுண்டுகளை பிரித்து போட வேண்டும். அனைத்து கோலிகுண்டுகளையும் பயன்படுத்தி நீங்கள் அதை எவ்வாறு வேண்டுமென்றாலும் பிரித்துக்கொள்ளலாம். உங்கள் கண்களை கட்டி, அந்த கிண்ணங்கள் வேறு இடத்திற்கு மாற்றிவிடப்படும். பிறகு ஒரு கிண்ணத்தை தேர்ந்தெடுத்து அதிலிருந்து ஒரு கோலிகுண்டை எடுக்க வேண்டும். நீங்கள் எடுத்த கோலி குண்டு வெள்ளை நிறமாக இருந்தால் நீங்கள் உயிர் வாழ்வீர்கள். ஆனால், கருப்பாக இருந்தால் நீங்கள் இறந்து வீடுவீர்கள். நீங்கள் வெள்ளை கோலிகுண்டை தேர்ந்தெடுக்க ஏதுவாக கோலிகுண்டுகளை எவ்வாறு பிரிப்பீர்கள்?

2. இரண்டு பெரியவர்கள் மற்றும் இரண்டு குழந்தைகள் ஒரு நதியை கடக்க விரும்புகின்றனர். படகு ஒன்றை செய்கின்றனர். ஆனால், அதில் ஒரு மனிதரும் அல்லது இரண்டு குழந்தைகள் மட்டுமே செல்ல முடியும். நான்கு பேரையும் அக்கரையில் சேர்ப்பதற்கு குறைந்தபட்சமாக படகு எத்தனை முறை நதியை கடக்க வேண்டும்?

3. நீங்கள் ஏழு தங்கக் கட்டிகளை வைத்துள்ளீர்கள். அதில் ஒன்று போலியானது மற்றவற்றைவிட எடை குறைவானதும் கூட. உங்களிடம் தராசு ஒன்று உள்ளது ஆனால் அதை இரு முறைதான் பயன்படுத்த முடியும். போலியான தங்கத்தை எவ்வாறு கண்டுபிடிப்பீர்கள்?

4. பால்காரர் ஒருவரிடம் இரண்டு காலி ஜக்குகள் உள்ளன. ஒன்று மூன்று லீற்றரும், மற்றொன்று ஐந்து லீற்றரும் பிடிக்கும். பாலை வீணாக்காமல் ஒரு லீற்றர் பாலை எவ்வாறு அளப்பார்?

5. 1 - வியட்நாம், 2 - பனாமா, 3 - புருண்டி, 4 - நியூசிலாந்து, 5 - சீன குடியரசு ஆறாவது நாடு என்னவாக இருக்கும்?

**குறிப்பு : 5 புதிர்களுக்கும் சரியான விடையளிக்கும் அதிஸ்ரசாலி போட்டியாளரை தமிழிசை தனது இதழ் 3ல் கௌரவப்படுத்தும்.**

# இளந்தலைமுறைப் படைப்பாளி அறிமுகம்

1. முழுப் பெயர் : லதாகரன் ஹிஷா
2. முகவரி : 84, திருக்கடலூர்,
திருகோணமலை
3. எழுத்துத் துறைப் பிரவேசம் : 2006
4. எழுத்துத் துறை அனுபவம் : 16 வருடங்கள்
5. படைப்புக்கள் தொடர்பான விபரம் : புதுக் கவிதை, கட்டுரைகள்
6. படைப்புக்களது கருப் பொருள் : பொது
7. எழுத்துத் துறையில் ஈடுபட ஆர்வம் ஏற்படக் காரணம் :
பாரதி கவிதைகளில் ஏற்பட்ட விருப்பம்
8. எழுத்துத் துறையிலான எதிர்கால இலட்சியம் :
சகலரும் அறிந்த படைப்பாளியாக திகழ்தல்
9. பலம் : அம்மா
10. பலவீனம் : தனிமை
11. சக இளந்தலைமுறைப் படைப்பாளிகளுக்கு கூறும் அறிவுரை :
ஆக்கபூர்வமான படைப்புக்களை
படையுங்கள்
12. பெற்றுள்ள சான்றிதழ்கள்/ பரிசில்கள்
பாடசாலை மட்டத்தில் பல சான்றிதழ்கள்
கிழக்கு மாகாண அரச படைப்பாளிகள்
கவிதை பிரிவில் முதலாமிடம்
13. எழுதியதில் பிடித்த வரிகள் : “நான்
நீ
அம்மா
ஆம் அவள் நம் உலகம்”

# படைப்பாளி அறிமுகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | முழுப் பெயர் | : | கெஜரெத்தினம் தர்மகுலராசா |
| 2. | புனை பெயர | : | நிலாவெளியூர் கெஜ-தர்மா |
| 3. | முகவரி | : | நிலாவெளி, திருகோணமலை |
| 4. | பெற்றோர் | : | கெஜரெத்தினம், வள்ளிப்பிள்ளை |
| 5. | பிறப்பு | : | ஜனவரி, 5, 1958 |
| 6. | தொடர்பிலக்கம் | : | 0712102739 |
| 7. | ஈமெயில் | : | kejatharma@gmail.com |
| 8. | கல்வி கற்ற பாடசாலைகள் | : | |

நிலாவெளி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை,
கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயம்,
திருகோணமலை இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

| | | | |
|---|---|---|---|
| 9. | தொழில் | : | குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்ற பதிவாளர் |
| 10. | துறை | : | சிறுகதை, கவிதை, நாவல், விமர்சனம் |
| 11. | வெளியீடு | : | |

1986 இல் மித்திரனில் "ரோஜாவைப் பறிக்காதே" நாவல் வெளியீடு 2014 இல் "வைகாசி 29" கவிதை நூல் 2018 இல் "அந்த மூன்று நாட்கள்" குறுநாவல்

12. இலக்கிய பங்களிப்பு :

சிறுகதை மஞ்சரி எனும் இதழின் தொடர்ச்சியான படைப்பாளி
கவியரங்க கவிஞர், தலைவர்
மேடைப் பேச்சாளி, விமர்சனவாதி
குச்சவெளி பிரதேச செயலக கலாசார பேரவைத் தலைவர்
நிலாவெளி பொது நூலக நிலாமகள் சஞ்சிகை ஆசிரியர்

13. இலக்கிய அனுபவம் : 50 வருடங்கள்

# புகழ் பெற்ற கல்லறை வாசகங்கள் (படித்ததில் பிடித்தது)

கவிஞர் ஷெல்லியின் தாயாரின் கல்லறையில்…

“ சப்தமிட்டு நடக்காதீர்கள், இங்கே தான் என் அருமைத் தாயார் இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள்”

பேரழகி கிளியோபாட்ராவின் கல்லறையில்..

“ உலகத்திலேயே அழகான பிணம் இங்கே உறங்கிக் கொண்டிருக்கிறது. நல்ல வேளை இவள் பிணமானாள். இல்லாவிட்டால் இந்தக் கல்லறைக்குள் ரோமாபுரி சாம்ராஜ்யமே பிணமாகியிருக்கும்.”

மகா அலெக்சாண்டர்

“ இந்த உலகம் முழுவதுமே போதாது என்று சொன்னவனுக்கு, இந்தக் கல்லறைக் குழி போதுமானதாக ஆகிவிட்டது”

ஒரு தொழிலாளி

“ இங்கே புதைகுழியில் கூட இவன் கறையான்களால் சுரண்டப்படுகிறான்.”

அரசியல்வாதி

“ தயவு செய்து இங்கே கை தட்டி விடாதீர்கள். இவன் எழுந்து விடக் கூடாது.”

தொகுப்பு

**த. முரளிதரன்**

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

# அனுபவ மொழிகள்

**தவளை கத்தினால் மழை**

**அந்தி ஈசல் பூத்தால் அடைமழைக்கு அச்சாரம்**

**தும்பி பறந்தால் தூரத்தில் மழை**

**எறும்பு ஏறில் பெரும் புயல்**

**மார்கழி மழை மண்ணுக்கு உதவாது**

**தை மழை நெய் மழை**

**மாசிப் பனி மச்சையும் துளைக்கும்**

**தையும் மாசியும் வீடு மேய்ந்து உறங்கு**

**புற்றுக் கண்டு கிணறு வெட்டு**

**வெள்ளமே ஆனாலும் பள்ளத்தே பயிர் செய்**

**காணி தேடினும் கரிசல் மண் தேடு**

**களர் கெட பிரண்டையைப் புதை**

**கூளம் பரப்பி கோமியம் சேர்**

**ஆற்று வண்டல் தேற்றும் பயிரை**

**கோரையைக் கொல்ல கொள்ளுப் பயிர் விதை**

**கலக்க விதைத்தால் களஞ்சியம் நிறையும்**

தொகுப்பு

**த. முரளிதரன்**

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

## முயன்று பாருங்கள் – 1

அந்த அதிகாலைப் பொழுது பறவையினங்களின் கீச்சலோடும் தென்றற் காற்றின் மென்மையான வருடலோடும் நிசப்தமான அமைதியோடு மெல்ல மெல்ல புலரத் தொடங்கியது பகலவன் தன் செந்நிறக் கதிர்களை கடலின் திரைக்கு போர்வை போர்த்திக் கொண்டு உதயமாகத் தொடங்கும் அந்த பொழுதில் மனதில் ஓராயிரம் கனவுகளுடன் படுக்கையில் அங்கும் இங்கும் புரண்டபடி...

தொடருங்கள் இளந்தலைமுறைப் படையாளிகளே...!

## முயன்று பாருங்கள் – 2

அள்ளி வந்த ஆசைகளை எங்கும்
கிள்ளி தெளித்து ஆனந்தம் கொண்டாடி
எள்ளி நகையாடி ஊர் வம்புகள் பேசி
பள்ளி ஓடி ஒளிந்து திரிந்தோம்...

தொடருங்கள் இளந்தலைமுறைப் படையாளிகளே..!

இதனைத் தொடர்ந்து இன்னும் பன்னிரண்டு (3 பந்திகள்) வரிகள் சேர்த்து அழகிய கவிதையாக்கி பொருத்தமான தலைப்பிட்டு எமக்கு அனுப்பி வையுங்கள்.

சிறந்த கவிதைக்கு பரிசிலும் பாராட்டுச் சான்றிதழும் தரக் காத்திருப்பதுடன் தெரிவு செய்யப்படும் கவிதை தமிழிசை இதழ் 03 இல் பிரசுரமாகும்.

தொகுப்பு
"ஆசிரியர் தமிழிசை"

# சிரேஷ்ட பிரஜைகளின் சிறப்புரிமைகள் சில...

இன்றைய முதியவர்கள் நேற்றைய இளைஞர்கள் இன்றைய இளைஞர்கள் நாளைய முதியவர்கள். இதுதான் இயற்கை சமநிலை யதார்த்தமாகும். சர்வதேசக் கணிப்பின் படி ஒரு மனிதனின் ஆயுட்காலம் 81 வருடங்களென அளவிடப்படுகிறது. எனினும் இக்கணிப்பீடானது நாட்டுக்கு நாடு வேறுபாடு காணலாம். ஐ.நா.வின் கணிப்பீட்டின் படி உலகில் உள்ள 10 பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்டோர் காணப்படுகின்றனர். இது 2050ம் ஆண்டளவில் ஐந்துக்கு ஒன்று என்ற விகிதத்திலும் 2150ம் ஆண்டளவில் மூன்றிற்கு ஒன்று என்ற அடிப்படையிலும் இத்தொகை மாறுபடலாமென எதிர்பார்க்கப்படுகின்து. தற்போதைய உலகளாவிய புள்ளி விபரத்தின் படி 60 கோடிக்கு மேற்பட்ட முதியோர்கள் காணப்படுவதாக கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

பொதுவாக நமது நாட்டிலும் 60 வயதினை கடந்த ஆண்பெண் அனைவரும் மூத்த குடி மக்கள் அல்லது சிரேஷ்ட பிரஜைகள் என்று கண்ணியப்படுத்தப்பட்டுள்ளனர். 1990ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி ஐ.நா.பொதுச்சபையின் பிரிவு 4/106ன்படி முதியோர்களைக் கௌரவிக்கும் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதியோர்தினம் கொண்டாடப்படுகின்றது.

அனுபவம் ஓர் உயர்ந்த நகை ஏனென்றால் அது கூடுதலான விலை கொடுத்தே வாங்கப்படுகின்றது. என்பது சேக்ஸ்பியரின் கூற்றாகும். சிரேஷ்ட பிரஜைகள் நீண்ட காலம் அனுபவமான அரசசேவையாளர்களாகவும், சமூக சேவையாளர்களாக, நாட்டிற்கும், சமூகத்திற்கும் பெரும்பங்களிப்புகளை வழங்கியவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் முதியோர்கள் என்ற சம்பிரதாய மூலையில் முடங்கி பராமரிப்பற்று பராமுகமாக கிடப்பவர்களைப்பாதுகாக்கும் நோக்குடன் சர்வதேச மற்றும் தேசியமட்ட சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட பிரஜைகளை பாதுகாக்கும் சட்ட ஏற்பாடுகளை நோக்குவோம்...

- **மூத்த பிரஜைகளுக்கான தேசியபட்டயமும் தேசிய கொள்கையும்.**

  ✷ 2006ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் திகதி அமைச்சரவையினால் சிரேஷ்ட பிரஜைகளுக்கான தேசிய பட்டயமும் தேசிய கொள்கையும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிரேஷ்ட பிரஜைகளின் உரிமைகள் பொறுப்புகள் தேசிய கொள்கை செயற்றிட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

  ✷ 2011 ஆண்டின் 5ம் இலக்க முதியோர் உரிமை பாதுகாப்பு திருத்த சட்டம் 2000 ஆண்டின் 9ம் இலக்க முதியோர் உரிமை பாதுகாப்பு சட்டத்தின் சில பிரிவுகள் திருத்தங்கள் (3 14 16 18 24 28) உருவாக்கப்பட்டுள்ளதுடன் புதிதாக 24 ஏ என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.

- **முதியோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான அரசநிறுவனங்கள்.**

  ✷ இலங்கை அரசாங்கம் பின்வரும் அரச நிறுவனங்களை உருவாக்கி முதியோர் உரிமைகளை மதிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

1. தேசிய முதியோர் சபை (National Council Eldres)

   முதியோர் உரிமைகள் அவர்களது நலன்கள் என்பவற்றை பாதுகாக்கவும் மேம்படுத்துவதையும் நோக்கமாக கொண்டு முதியோர்கள் சுய மரியாதையுடனும் கௌரவத்துடனும் சுதந்திரமாக வாழ்வதற்கான வழிவகைகளை அரசுக்கு ஆலோசனை வழங்கல் இதன் பணியாகும்.

2 முதியோருக்கான தேசிய செயலகம் (National Secretariat for Elders)

   தேசிய செயலகத்தின் இலக்கு-சிரேஷ்ட உரிமைகளை பாதுகாத்தல்மேம்படுத்தல் பிரச்சினைகளைக் கண்டறிதல் அதற்கான தீர்வு யோசனைகளை முன்வைத்தல் மற்றும் முதியோர்களிடம்

காணப்படும் அறிவு அனுபவங்களின் அடிப்படையில் இவர்கள் மூலமாக சமூக நல அபிவிருத்திக்கான பங்களிப்பை பெறல் குறைந்த வருமானமுடைய முதியோர்களுக்கு வாழ்வாதாரமுயற்சியின்பேரில் தொழில்முயற்சி பயிற்சிகளை வழங்கல்.

3. சிரேஷ்ட பிரஜைகள் பராமரிப்பு (கோரிக்கைகள்) சபை (Elders Maintenance Board)

2000 ஆண்டின் 09ம் இலக்க முதியோர் பராமிப்பு சபை சட்டத்தின் பிரகாரம் பிள்ளைகளால் புறக்கணிக்கப்படும் பெற்றோர்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தல் நோக்கில் உருவாக்கப்பட்டது.

பிள்ளைகளால் பராமரிக்கப்படாது கைவிடப்படும் பெற்றோர்களின் கோரிக்கை விசாரிக்கப்பட்டு பெற்றோரைப் பராமரிக்கும் கட்டளையைப் பெற்றுக்கொடுக்கும் பணியினை இச்சபையால் மேற்கொள்ளப்படும். அநாதரவாக கைவிடப்படும் பெற்றோர்கள் தமது கோரிக்கையை பிரதேச செயலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தர் அல்லது முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலகரிடம் சமர்ப்பிக்க முடியும்.

பெற்றோர்களுக்கு பராமரிப்பு செலவு வழங்காமல் புறக்கணிப்பு செய்வது முதியோர்பாதுகாப்பு சட்டத்தின் 9ம் இலக்க 33 உபபிரிவு 13ன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். நீதிமன்றத்தை அவமதித்த குற்றமாகவும் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்.

4. முதியோர் நலனுக்கான தேசிய நிதியம்

முதியோர் நலனுக்கான தேசிய நிதியமானது தேசிய முதியோர் சபையை வலுப்படுத்துவதற்கும் முதியோரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல் இந்நிதியம் பயன்படுத்தும்.

- **சட்ட உதவி ஆணைக்குழுவின் முதியோர்மேசை**

மேற்படி ஆணைக்குழுவின் முதியோர் பரிவு கீழ் குறிப்பிடும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- பராமரிப்புக் கோரிக்கை
- விபத்து நஷ்டஈட்டு கோரிக்கை
- சொத்து இழப்பு் கோரிக்கை
- ஓய்வூதியக் கோரிக்கை
- முதியவர்களின் அடிப்படை உரிமை தொடர்பில் இலவச சட்ட ஆலோசனை வழங்கல்
- முதியோர் இல்லங்கள் அமைத்தல்
- முதியோர் பராமரிப்பு நிலையங்கள் அமைத்தல்
- கிராமசேவை உத்தியோத்தர் பாடசாலை மாணவர்கள் ஆகியவர்களுக்கு முதியோர் உரிமைகள் தொடர்பான அறிவூட்டல் ஆலோசணை வழங்கல்

சிரேஷ்ட பிரஜைகள் தொடர்பான சர்வதேச தேசியமட்ட சட்ட ஏற்பாடுகள் இருப்பினும் நடைமுறைப்படுத்தலில் செயற்றிறன் குறைவானதாகவே கருதப்படுகின்றது. ஆதலால் அனைத்து அரச தன்னார்வ நிறுவனங்களும் தமது வேலைத் திட்டங்களின் ஊடாக அனுபவமிக்க சிரேஷ்ட பிரஜைகளை நாட்டின் அபிவிருத்திக்கும் சமூகநல விருத்திக்கும் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகளை செய்யலாம்.

தொகுப்பு

**எஸ்.எல். முகைதீன்பாவா**

(ஓய்வு நிலைய அதிபர்- புல்மோட்டை மத்திய கல்லூரி)

# தாயன்பு...

விலை மதிக்க முடியாதது தாயின் அன்பு தாயன்பிற்கு நிகரேது.கள்ளமில்லாத உள்ளம்..கருணை மிகுந்த பார்வை அன்பைப்பொழியும் வார்த்தைகள் அரவணைத்து முத்தமிடுவது தாய்ப்பாசம். தாயின் அன்பு தனித்துவமானது. ஈடிணையில்லாதது கொடுக்கக் கொடுக்க குறையாது. இப்படிப்பட்ட தாய்மை என் மனதில் நிறுத்தி ஒரு சில வார்த்தைகள்.......

ஈரைந்து மாதங்கள் கருவில் சுமந்து இரவு பகல் கண் முழித்தது இவ்வுலகிற்கு ஒரு உயிரை ஈன்றெடுக்கும் வரை எத்தனை வகையான இன்னல்களை அனுபவிக்கின்றாள். இருப்பினும் அவளின் அன்பிற்கோ குறைவில்லை. யாரொருவர் தாய் தந்தையை தெய்வமாக நினைத்து வணங்குகின்றனரோ அவர் வாழ்க்கையில் அனைத்து செல்வங்களையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்வது உறுதி .

அம்மா என்ற சொல்லுக்கு ஈடிணையில்லாதது ஏதுமில்லை. ஒரு குழந்தை தனது தாயின் அம்மா என்று அழைக்கும் போது அத்தாயினது உள்ளம் எவ்வளவு பூரிப்படைகின்றது அதனை வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியாது. அதே குழந்தை வளர்ந்து பெரியவனானதும் முதியோர் இல்லத்தில் சேர்க்கும் போதும் கூட தாயன்பு குறைவதில்லை ஆனால் பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லு எனும் கூற்றுக்கு அமைவாகவும் சில இடங்களில் பிள்ளைகளின் மனம் கல்லாகவே காணப்படுகிறது.மீண்டும் தேடி அமர முடியாத சிம்மாசனம் தாயின் கருவறை. அக்கருவைறயில் இருக்கும் குழந்தை உலகிற்கு வந்து வளர்ந்து பெரியவராக வரும்போது மனதில் ஏற்படுகின்ற ஒருசில மாற்றங்கள் இவற்றிற்கு காரணமாக அமைகின்றது. எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தையே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே எனும் பாடலானது தாயன்பின் வளர்ப்பினை எடுத்து காட்டுகின்றது. தாயன்பின் அரவணைப்பில் வளரும் பிள்ளைகளின் எதிர்காலமானது நன்றாக அமைந்திருப்பது நிதர்சனமான உண்மையாகும். இன்றைய காலகட்டத்தில் தாயன்பிற்கு ஏங்கும் பிள்ளைகள் ஏராளம். தாயின் உன்னதமான அன்பைப் பெறும் பிள்ளைகள் பாக்கியசாலிகள். உலகத்தில் உள்ள அனைத்து தாய்மார்களுக்கும் எனது கோடானகோடி நன்றி கலந்த வணக்கம்.

**பா. விஜயகுமாரி**

அபிவிருத்தி உத்தியோகத்தர்

# மயானங்களின் பூமியிது

*அடங்காத மண்ணென்று*
*பழங்கதைகள் நிதம் பேசி*
*வீரமுடன் வாழ்ந்திருந்த வாழ்வெல்லாம்*
*வீணாகி போனதுவே.*
*வெற்றுக் கையோடு உயிர் பிடித்து*
*குண்டுக்கும் செல்லுக்கும் பாய்ந்தொழித்து*
*உடமையிழந்து உயிர்வாழ நேர்ந்ததுவே.*
*வெற்றி முரசுகள் தினமொழிக்க*
*விடிவின்று கிடைக்குமென்று*
*வாழ்ந்திருந்த வாழ்க்கையெல்லாம்*
*பொய்யாகிப் பழங்கனவாய்*
*போனதுவோ..?*
*மருந்துத் தடை விதித்து*
*உணவுத் தடை விதித்து*
*வன்முறையாய் நச்சுகுண்டு வீசி*
*பெற்ற வெற்றிகள் கோட்டையில்*
*கொடியேற்றத்துடன் நடந்தாலும்*
*காவு கொள்ளப்பட்ட உயிர்க்காய்*
*ஒரு இரங்கல் கூட இல்லையே.*
*அழிக்கப்பட்ட தெல்லாம்*
*பயங்கரவாதிகள் தானா*
*பொதுமக்களின் கணக்கை யார்*
*சொல்வது...*
*நம்பி வந்த மக்களையும்*
*நட்டாற்றில் விட்ட கதையாய்...*
*முகாமென்று சிறைவாசம் தொடர்கிறது...*
*எந்தையும் தாயும் மகிழ்ந்து*
*குலாவிய தேசமின்று*
*மயானங்களின் தேசமாய் போனதே.*

**ச.கோபிரமணன்**
பிரதேச செயலகம்
குச்சவெளி

# என் மனம் திணறுகிறது...

*என் நம்பிக்கை*
*நொருங்கும் போது*
*கனவுகள்*
*கருகும் போது*
*தெருவெல்லாம்*
*கண்ணீர் ஓலங்கள்*
*உலகெங்கும் கேட்க*
*ஒட்டிய வயிறுடன்*
*எங்கள் தேசம்*
*வரிசையில் நின்று*
*உயிர் நீந்தும் போது*
*உரிமைகளை இழந்து*
*ஊனங்களாய் போகும் போது*
*நம்பிக்கை இழந்தவன் போல்*
*மீள முடியாத*
*வருமான வறுமைக்குள்*
*தனிமையின் மௌனங்களில்*
*எப்போது தான்*
*எம் நம்பிக்கை*
*உயிர்பிக்கப் போகிறதோ!*
*காத்திருப்பது*
*நான் மட்டுமல்ல*
*எங்கள் தேசத்தின்*
*ஒற்றுமை எனும்*
*ஆளுமையில் தான்*
*இந்த மண்*
*புது யுகம்*
*படைக்கப் போகிறதாம்*
*கடன் இல்லாத*
*ஒரு தேசத்தை*
*இன்னொரு சமூகம்*
*சந்திக்கும் ஆனால்*
*அப்போது நாம்*
*இருப்போமா?*
*பதிலில்லாத*
*என் மனம்*
*திணறுகிறது*
*காலம் இந்த மண்ணுக்கு*
*புது வரலாறு ஒன்று*
*எழுதட்டும்...*

**முஸம்மில்**
கோபாலபுரம்

# ஏன் இந்த வேதனை...

*எத்தனை காலம் தான்*
*இந்த இன்னல்களை*
*நாம் அனுபவிப்பது*

*கொரோனா என்னும்*
*கொடிய நோய் வந்து*
*கொன்று குவிக்கிறது*
*கொஞ்சம் நஞ்சமா*
*மனித உயிர்கள்*
*மலிந்து போனதோ*

*சுகாதாரம் பேண வேண்டி*
*சொல்லிக் கொடுத்தாலும்*
*சற்றும் கவனமின்றி*
*சட்டை செய்யாமல்*
*போவதேனோ*

*கல்வி கற்கும் மாணவர்க்கு*
*கடும் சோதனை காலமன்றோ*
*போதாக்குறைக்கு*
*மற்றுமோர் தொற்றும்*
*ஒமிக்ரோனாம்*
*புதிய வைரஸாம்*
*பொல்லாத நோயாம்*

*ஏறிவரும் விலைவாசி*
*ஏகிற வைக்கிறது இதயத்தை*
*ஏழைகள் படும் இன்னலை*
*எந்த வார்த்தையில் எடுத்துரைப்பது*

*சீரான படிப்பில்லை*
*ஒழுங்கான உழைப்பில்லை*
*வேதனையின் விளிம்பில் வெந்து போனோம்*
*மனம் நொந்து போனோம்*
*எல்லாம் வல்ல இறைவன் தான்*
*இதற்கொரு தீர்வு தர வேண்டும்*

**நிஹாரா**
கோபாலபுரம்



# அனர்த்த முகாமைத்துவமும் இலங்கை எதிர்கொள்ளும் சவால்களும்

புவியில் வாழும் மனிதர்களுக்கு திடீரென பல்வேறு வகையான ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. இவற்றினையே நாம் அனர்த்தங்கள் என குறிப்பிடுகின்றோம். அனர்த்தம் என்பது ஒரு சமூகத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் இடைநிறுத்தும் ஒரு பாதகமான பாரிய நிகழ்வாகும். அதாவது உயிர்கள், உடமைகள், பொருளாதாரம், சுற்றுச் சூழல் என்பனவற்றில் பாரியளவில் தாக்கம் ஏற்படுமாயின் அதனை அனர்த்தம் எனலாம்.

பெல்ஜியம் நாட்டின் School of Public Health of the Catholic University of Louvain ஐ அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு 1980 களில் உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்தியங்கும் நிலையமான Centre for Research on the Epidemiology of Disaster எனும் நிறுவனம் அனர்த்தம் என்பதை பின்வருமாறு கூறுகின்றது. “ஒரு சமூகத்தின் இயலளவை மீறிச் செல்லும் ஒரு நிகழ்வாகவும் அதே வேளை அச்சமூகம் அம்மீறலிலிருந்து விடுபட தேசிய, சர்வதேச உதவிகளை எதிர்பார்க்கும் நிலைக்கு தள்ளப்படுவதுடன் எதிர்பாராத இந்நிகழ்வின் மூலம் பாரிய பாதிப்பும் துன்பங்களும் ஏற்படுத்தப்படுமாயின் அது அனர்த்த நிலைமையாகும்”.

UN-ISDR அனர்த்தம் என்பதை பின்வருமாறு வரையறை செய்கின்றது. “ஒரு இயற்கை அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பாதகமான நிகழ்வானது ஒரு சமூகத்தின் செயற்பாட்டினை சீர்குலைத்து மனித உயிர்கள், சொத்துக்கள் மற்றும் பொருளாதாரத்தை அழித்து சூழலையும் பாதித்து பாதிக்கப்பட்ட அச்சமூகம் தனது வளத்தைக் கொண்டு தனது தேவைகளை நிவர்த்தி செய்ய முடியாத அளவுக்கு பாதிப்பினை ஏற்படுத்துமாயின் அது அனர்த்தமாகும்.

சர்வதேச அனர்த்த தரவுத் தளம் (EM-DAT) அனர்த்தத்தினை இரு வகையாக வகைப்படுத்துகின்றது.

1. இயற்கை அனர்த்தம் (Natural Disaster)

2. தொழில் நுட்பம் சார் அனர்த்தம் (Technological Disaster)

மனித செயற்பாட்டினூடாகவும் இயற்கையின் பௌதீக மாற்றங்களினால் ஏற்படும் பாதக விளைவுகள் இயற்கை அனர்த்தமாகும்.

1. நீர் நிலை சார் அனர்த்தம் (Hydro-Meteorological Disasters) வெள்ளம், வரட்சி, மண்சரிவு

2. புவிசார் அனர்த்தம் (Geophysical Disasters) புவிஅதிர்ச்சி, சுனாமி, எரிமலை

3. உயிரியல் சார் தொற்றுக்கள் (Biological Disasters) நுண்ணங்கி

மனிதனுடைய ஆக்க பூர்வமான கண்டுபிடிப்புக்களில் ஏற்படும் தொழிநுட்ப தவறுகளினூடாக ஏற்படும் பாதகமான நிகழ்வின் மூலம் மக்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படுத்தப்படுமாயின் அது தொழிநுட்பம் சார் அனர்த்தம் எனப்படும்.

ஆதிகாலம் தொட்டே மனிதன் இடர்களை எதிர்கொண்டு வந்துள்ளான். இடரிலிருந்து தப்பித்துக் கொள்ள அவன் அன்று செய்து கொண்ட செயற்பாடுகளே இன்றைய அனர்த்த முகாமைத்துவத்திற்கு அடிப்படையாக அமைந்தது எனலாம். அனர்த்த முகாமைத்துவம் என்பது அனர்த்தத்தின் மூலம் ஏற்படக் கூடிய ஆபத்தினை ஒரு படிமுறையில் அரசாங்க சட்ட திட்டங்கள் கொள்கைகள் மற்றும் நடைமுறையிலுள்ள அனர்த்த ஆபத்துக் குறைப்பு நடவடிக்கைகளுடன் நிருவாக தீர்வுகள் நிறுவன அமைப்பு நடைமுறைப்படுத்தக் கூடிய திறன் அனைத்தையும் ஒன்றிணைத்து செயற்படுத்தும் சீரான செயன்முறையாகும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் பல்வேறு காலகட்டங்களில் நடைபெற வேண்டிய பலவகைப்பட்ட செயற்திட்டங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

அனர்த்த முகாமைத்துவத்தின் முக்கிய மூன்று கட்டங்களும் வருமாறு:-

1. அனர்த்தத்திற்கு முன்

- தடுத்தல்
- பாதுகாப்பைத் தேடல்
- முன்னாயத்தம் செய்தல்

2. அனர்த்தத்தின் போது

- அவசர உதவிகள் (உணவு, மருந்து, தற்காலிக இருப்பிடம்)

3. அனர்த்தத்தின் பின்

- புனர் வாழ்வழித்தல்
- புனரமைப்பு செய்தல்


முதலாவதாக அனர்த்தத்திற்கு முன்னரான செயற்பாடுகளில் தடுத்தல் என்பது முக்கியமானது. இது மோசமான இடர்களினாலும் மற்றும் இயற்கை அனர்த்தம், தொழில்நுட்பம் சார் அனர்த்தம் போன்றவற்றின் தாக்கத்திலிருந்தும் விலகியிருப்பதற்கான அல்லது அவற்றின் விளைவுகளால் பாதிக்கப்படாமல் தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளாகும். அனர்த்த முகாமைத்துவத்தில் முதற்கட்ட செயற்பாடாக தடுப்பு காணப்பட்ட போதும் இலங்கை போன்ற நாடுகளில் அனர்த்த முகாமைத்துவத்தின் இரண்டாம் கட்ட அவசர உதவிகள் என்பதிலேயே கூடிய கவனமெடுத்து வந்துள்ளமையினை நாம் அவதானிக்கலாம். ஆனால் அனர்த்த ஆபத்தினை தடுக்க எடுக்கும் நடவடிக்கைகள் சாதகமாக அமையுமானால் அனர்த்த முகாமைத்துவத்தின் இரண்டாம், மூன்றாம் கட்ட நடவடிக்கைகளின் முக்கியத்துவம் அற்றுப் போகும்.

அடுத்து, அனர்த்தத்தினால் ஏற்படக் கூடிய மிக மோசமான ஆபத்துக்களிலிருந்து தப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தலே அனர்த்தத்திலிருந்து பாதுகாத்தல் நடவடிக்கைகளாகும். இத்தகைய நடவடிக்கைகள் கட்டமைக்கப்பட்டதாகவோ அல்லது கட்டமைக்கப்படாததாகவோ இருக்கலாம்.

**அனர்த்த**

**முகாமைத்துவச்**

**சுற்றோட்டம்**



முன்னாயத்தம் செய்தல் என்பது குறித்த ஒரு பிரதேசத்திற்கு அனர்த்த ஆபத்து ஏற்பட வாய்ப்பிருக்குமென எதிர்பார்க்கப்படும் போது அந்த ஆபத்துக்களிலிருந்து ஒவ்வொருவரும் எவ்வாறு சுயமாகவோ மூச பிறரது உதவியுடனோ தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் மூச அனர்த்த ஆபத்திலிருந்து விலகியிருக்க முடியும் என்பது தொடர்பான நடவடிக்கை எடுத்தலாகும். அனர்த்த முன்னாயத்த செயற்பாடுகள் முறையாகவும் நன்கு திட்டமிடப்பட்ட நிலையிலும் நிலைத்திருக்கக் கூடியதாகவும் இருக்குமாயின் அனர்த்த ஆபத்துக்களிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பது அல்லது அனர்த்த ஆபத்துக்களை குறைப்பது இலகுவானது.

அனர்த்த முகாமைத்துவத்தில் முன்னாயத்தம் செய்தலே பிரதானமானதாகும். ஏனெனில் அனர்த்த முகாமைத்துவத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் முன்னாயத்தமே முதற்படியாகும். ஆகவே முன்னாயத்தம் வலுவுள்ளதாக அமைய வேண்டும். இதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

- பொது மக்களுக்கான விழிப்பூட்டல்
- முன் எச்சரிக்கை நடவடிக்கை
- அறிவூட்டல்
- பயிற்சிகளும் ஊக்குவித்தலும்
- நிறுவன ரீதியான பலப்படுத்தல்
- தேவைகளை முன்கூட்டியே சேமித்து வைத்தல்
- ஏனையவை

பொதுமக்களுக்கான விழிப்பூட்டல் என்பது அனர்த்த ஆபத்துக்குள்ளாக்கப்படும் அல்லது ஆபத்துக்கு உள்ளாக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற சமூகத்தின் சகல அங்கத்தவர்களுக்கும் பின்வரும் விடயங்கள் பற்றி விழிப்பூட்டல் செய்வதாகும்.

- அனர்த்தத்தின் தன்மை
- அனர்த்தம் ஏற்படும் மாதிரி
- அனர்த்தத்தினால் ஏற்படும் பாதிப்பு
- அனர்த்தத்தினால் ஏற்படும் விளைவு

- முன்கூட்டி எடுக்க வேண்டிய நடவடிக்கை
- அனர்த்த சுயபாதுகாப்பு
- விசேட தேவையுள்ளவர்களுக்கான பாதுகாப்பு என்பனவாகும்.

அவ்வாறே முன் எச்சரிக்கை நடவடிக்கை என்பது அனர்த்தம் ஏற்படும் போது அல்லது அனர்த்தம் ஏற்பட்ட மறுகணமோ அதன் ஆபத்துக்களிலிருந்து பொது மக்களை தவிர்த்திருப்பதற்கும் பாதுகாத்துக் கொள்வதற்கும் குறைந்த பட்சம் அனர்த்த விளைவின் தாக்கத்தினை குறைத்துக் கொள்வதற்கும் வழங்கப்படும் அறிவித்தலாகும். இந்நடவடிக்கையினை பல்வேறு ஊடகங்களினூடாக வழங்கலாம்.

- வானொலி
- தொலைக்காட்சி
- பொது அறிவித்தல்
- அலாரம்
- விசேட சத்தங்கள், மணி ஒலித்தல் என்பனவாகும்.

மேலும், நிறுவன ரீதியான பலப்படுத்தல் என்பது அனர்த்த ஆபத்துக் குறைப்பு நடவடிக்கையில் மிக முக்கியமானதாகும். குறித்த சமூகத்தில்

- சமூக மட்ட நிறுவனங்கள்
- தொண்டர் அமைப்புக்கள்
- அரசு சாரா நிறுவனங்கள்
- பொது அமைப்புக்கள்
- அரச நிறுவனங்கள்

போன்ற இத்தகைய நிறுவனங்களைப் பலப்படுத்தும் போது இவை அனர்த்தத்தின் போது அவசர உதவிகளை வழங்குவதுடன் அனர்த்தத்தின் பின்னரான மீளமைப்பு மீள்கட்டுமாண நடவடிக்கைகளிலும் உதவக் கூடியதாகவிருக்கும்.

அனர்த்த ஆபத்து, அதிலிருந்து சமூகத்தவர் விலகியிருத்தல், தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளல், பிறரைப் பாதுகாத்தல், தம்மிடமுள்ள வளத்தினைப் பயன்படுத்தல், மற்றும் அனர்த்தத்தின் போது தமது தேவைக்காக சில முக்கிய பொருட்களை (நீர், மருந்துப் பொருட்கள், உணவுப் பொருட்கள், சிறுவர்களுக்கான உபயோகப் பொருட்கள்) சேகரித்து வைத்தல் போன்ற

விடயங்களில் அறிவூட்டும் போது அனர்த்த ஆபத்துக்களிலிருந்து சமூகத்தவரைப் பாதுகாக்க முடியும்.

அதுமட்டுமன்றி அனர்த்த ஆபத்துக்களிலிருந்து தானும் தமது சமூகத்தவரும் எவ்வாறு தப்பித்துக் கொள்ள முடியும் என்பதற்கும் ஆபத்தில் மாட்டிக் கொண்டவரை எவ்வாறு பாதுகாப்பது எவ்வாறு முதலுதவியளிப்பது போன்ற பயிற்சிகள் அனர்த்த ஆபத்தினைக் குறைக்க வழிசமைப்பதாக இருக்கும். இவ்வாறாக அனர்த்த முகாமைத்துவத்தில் அனர்த்தத்தின் முன்னரான செயற்பாடுகளில் தடுத்தல். பாதுகாத்தல், முன்னாயத்தம் செய்தல் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன.

அடுத்து, அனர்த்தத்தின் போதான செயற்பாடுகள் எனும் போது எதிர்பார்க்காத நிலையில் அனர்த்தம் ஒன்று நிகழ்ந்து சமூகம் பிறரது உதவியை எதிர்பார்க்கும் போது அவசர நிலையில் உடனடியாக செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளைக் குறிக்கின்றது.

இதில்முதலாவதாகமக்களைபாதுகாப்பானஇடத்திற்குமாற்றுதல்அவசியமாகும். அதாவது அனர்த்தம் நிகழ்ந்த இடத்திலிருந்து பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடத்துக்கு மாற்றுவது அனர்த்தத்தின் போதான நடவடிக்கையில் மிகவும் முக்கியமானது. இந்த நடவடிக்கையானது அரச சார்பற்ற சமூகமட்ட தொண்டர் நிறுவனங்களதும் பொதுமக்களதும் பலமான ஒன்றிணைவுடன் நடைமுறைப்படுத்த வேண்டிய செயன்முறையாகும். அதே வேளை பாதிக்கப்பட்டவர்களை இடம் மாற்றும் முன்னர் எங்கு இடம் மாற்றப் போகின்றோம் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டதாக இருக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு தங்க வைக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு தேவையான அவசர உதவிகள் வழங்குவது மிக அவசியமாகும். அவை,

- குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தல்
- உணவு வழங்குதல்
- குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தல்
- மருத்துவ வசதிகளை பெற்றுக் கொடுத்தல்
- குழந்தைகளுக்கான தேவைகளை அறிந்து அவற்றை வழங்கல்
- சிறுவர்களுக்கான தேவைகள்

- பாலூட்டும் கர்ப்பிணித் தாய்மாருக்கான அவசிய தேவைகள்
- பெண்களுக்கான விசேட தேவைகள்
- ஏனைய அத்தியாவசிய தேவைகள்

இவை அனர்த்தத்தின் போதான பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகும்.

தொடர்ந்து அனர்த்த முகாமைத்துவத்தில் மூன்றாவது கட்டமாக அமைவது அனர்த்தத்தின் பின்னரான புனர்வாழ்வு புனரமைப்பு செயற்பாடுகளாகும். ஒரு சமூகத்தில் அனர்த்தம் நிகழ்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகள் வழங்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு குடியமர்த்துவதும் அவர்களது வாழ்க்கையின் மீள் திரும்புகைக்கும் (Recovery) வழிசமைப்பதே அனர்த்தத்தின் பின்னரான புனரமைப்பு நடவடிக்கையாகும். பாதிக்கப்பட்ட மக்களை மீள் நிலைக்கு கொண்டு வருவதென்பது அனர்த்தப் பாதிப்புக்களுக்கு முன்னர் அச்சமூகம் எவ்வாறான வாழ்நிலையில் இருந்தார்களோ ஆகக் குறைந்தது அந்த மட்டத்திற்கு அல்லது அதற்கு மேல் அவர்களது வாழ்நிலையை அமைத்துக் கொடுப்பதாகும்.

- தரவுகளைச் சேகரித்தல், பதிதல், சரிபார்த்தல், பாதுகாத்தல்
- இழப்புக்களை மதிப்பிடல், உட்கட்டுமாண தேவைகளை அடையாளம் காணல்
- நிதிமூலங்களை இனங் காணல், பொறுப்பான நிறுவனங்களை அடையாளப்படுத்தல், பொறுப்புக்களை வரையறுத்தல்
- திட்ட கால அட்டவணையைத் தயாரித்தல்
- உட்கட்டுமாண வேலைகளை நடைமுறைப்படுத்தல், குடியிருப்புக்களை திருத்துதல்.
- உணவு நிவாரணங்களை வழங்குதல், பண உதவிகளைச் செய்தல், மீள் குடியேற்றங்களைச் செய்தல்.

போன்ற நடவடிக்கைகள் அனர்த்தத்தின் பின்னரான செயற்பாடுகளாகும். அதுமட்டுமன்றி அனர்த்தத்தின் பின்னரான புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளில் வாழ்வாதார செயற்பாடுகள் முக்கியமானது. வாழ்வாதாரம் எனும் போது பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்க்கையை பிறரது உதவியிலிருந்து தங்கியிருக்கும் நிலையிலிருந்து மீண்டு தமது உழைப்பின் மூலம் வாழ்க்கையை கொண்டு செல்ல வழிவகுக்கும் அனைத்து செயற்பாடுகளையும்

குறிப்பிடலாம். இச்செயற்பாடுகள் எதிர்காலத்திலே அவர்களது வருமான மட்ட அதிகரிப்புக்கும் பொருளாதார மீளுகைக்கும் வழிவகுப்பதாக இருக்க வேண்டும்.

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் எதிர்கொள்ளும் சவால்கள்

1) திடமான தேசிய திட்டமின்மை
2) நிலையான அனர்த்த ஆபத்தை எதிர்கொள்ளக் கூடிய முன்திட்டமின்மை
3) பலவீனமான தொடர்பாடலுடன் காணப்படும் நிறுவனங்கள்
4) பல பொறுப்புக்களை ஒரு நிறுவனம் செய்தல்
5) நிலையற்ற சட்ட ரீதியான ஒழுங்கமைப்பு
6) ஒழுங்குமுறைப்படுத்தப்படாத உண்மையற்ற தகவல் சேகரிப்பு முறையும் தொடர்பாடலும்
7) நிலைத்திருக்கக் கூடிய தேசிய திட்டமின்மை
8) ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன அமைப்பு இன்மை

இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ அனுபவங்களில் மேற்காட்டப்பட்ட சவால்களை திட்டமிடப்படாத வகையில் எதிர்கொள்ளப்பட்டமை உணரப்பட்டுள்ளது. ஆனால் 2004 இல் இடம் பெற்ற ஆழிப்பேரலை மூலமான அழிவுகள் இலங்கை அரசாங்கத்தையும் பல்வேறு விடயங்களில் சிந்திக்க வைத்துள்ளதுடன் செயற்படவும் வைத்துள்ளது. அதன் விளைவாக ஒழுங்கமைக்கப்பட்ட பல்வேறு நடைமுறைகள் அமுலுக்கு வந்துள்ளன.


1) இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் (2005)
2) தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் உருவாக்கம்
3) தேசிய தகவல் மையம் மூலமான தகவல்
4) மாவட்ட மட்ட அவசரகால முகாமைத்துவ அலகு
5) முன் எச்சரிக்கை மையங்கள் (Early Warning Centre)

கடந்த காலங்களில் பல சட்ட திட்டங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டாலும் 2005 ஆம் ஆண்டு சட்டமே வலுவுள்ளதாகவும் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் காணப்படுகிறது.

அனர்த்த முகாமைத்துவத்திற்கு தரவு முகாமைத்துவம் (ஐகெழசஅயவழைெ ஆயயெபநஅநவெ) மிக இன்றியமையாததாகும். ஆனால் சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் தரவு முகாமைத்துவம் வலுவற்றதாக காணப்படுவதுவும் அதன் காரணமாக அனர்த்த முகாமைத்துவம் வலுவற்றுப் போவதும் கடந்த கால அனுபவங்களாகவுள்ளன. குறிப்பாக இலங்கையில் அனர்த்தம் தொடர்பான தரவுகள் நம்பகத் தன்மை அற்றதாகவும் சரியான திட்டமிடலை செய்ய தடையாகவும் உள்ளது. இதற்கு தரவினை சேகரிப்பதில் எடுக்கப்படும் கவனம் அதனை பதிவதிலும் சரிபார்த்து பாதுகாப்பதிலும் எடுக்கப்படாமையே காரணமாகும். இத்தகைய தகவல் முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் இணைந்ததாகஏனையசெயற்பாடுகளும்முறையாகஒழுங்குபடுத்தப்படுமாயின் எதிர்காலத்தில் அனர்த்த ஆபத்துக்களைக் குறைக்க மூச தடுக்க முடியும்.

இன்றைய சூழ்நிலையில் சமூகத்தவரையும் இணைத்துக் கொண்ட வகையில் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை மேலிருந்து கீழ் நோக்கிய செயற்பாட்டிற்கு எதிரான கீழிருந்து மேல்நோக்கி செல்லும் அணுகுமுறையாக அமைந்துள்ளமை சமூக மையம்பட்ட அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதிலுள்ள ஆர்வத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

**இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ நிறுவன கட்டமைப்பு**



இலங்கையின் கடந்த கால அனர்த்த அனுபவங்களைப் பார்க்கின்ற போது அரை நூற்றாண்டுக்கு மேலாக இயற்கை இடர்களினூடாக அனர்த்தப் பாதிப்புக்கள் நாட்டின் சகல பிரதேசங்களையும் பாதிப்பக்குள்ளாக்கியுள்ளமை அவதானிக்கப்படுகிறது. ஆனால் மிக அண்மைக் காலமாக அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் மாற்றமடைந்துள்ளது. அதாவது ஆரம்ப காலத்தில் அனர்த்தத்தின் போதான நடவடிக்கைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்த செயற்பாடுகள் பின்னரான காலத்தில் அனர்த்தத்தின் பின்னரான புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியதுடன் மிக அண்மைக்காலமாக அனர்த்தத்தின் முன்னரான தடுத்தல், பாதுகாத்தல், முன்னாயத்தம் செய்தல் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அனர்த்த முகாமைத்துவத்தில் அனைத்து கட்டங்களையும் கவனத்திலெடுத்து செயற்பாடுகளை விரிவாக்கியுள்ளதுடன் அவற்றுக்கான சட்ட திட்டங்கள், அவற்றை செயற்படுத்த மேற்பார்வை செய்ய பொருத்தமான அமைப்புக்களையும் உருவாக்கியுள்ளது.

எனவே இந்த நடவடிக்கைகள் வெற்றியளிக்கக் கூடிய வகையில் சமூகத்தவரது ஈடுபாடும், அர்ப்பணிப்பும் அரசாங்கத்தின் சரியான வழிகாட்டல்களும் இலங்கையை எதிர்காலத்தில் அனர்த்தங்களுக்கு சவாலாக செயற்படக் கூடிய நிலையினை உருவாக்கும். இத்தகைய நடவடிக்கைகளின் முழுமையான முறையான அமுல்படுத்துகைலேயே எதிர்கால அனர்த்த முகாமையும் ஆபத்துக் குறைப்பும் அனர்த்த பாதிப்புக்களின் வலுவான மீள் பெறுகையும் அதனோடு இணைந்த வகையிலான நிலைத்திருக்கக் கூடிய சமூக அபிவிருத்தியும் தங்கியுள்ளது.

தொகுப்பு
நாகேஸ்வரன் சுமதி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
குச்சவெளி

# ஒரு தாய்-பிள்ளையாய் மீண்டெழுவோம்...

ஒன்றாய் சேர்ந்தே வாழ்திருந்தோம்
ஒன்றாய் சேர்ந்தே வாழவைத்தோம்
ஒரு தாய் பிள்ளைகள் போல் இருந்தோம் – அந்நாளில்

ஒன்றாய் சேர்ந்தே கனவு கண்டோம்
ஒன்றாய் சேர்ந்தே கனிய வைத்தோம்
பிரிதாய் நின்று ஏன் வாள் எடுத்தோம் – பின்நாளில்



தலைகளும் மண்ணில் புரண்டதுவே
உடல்களும் மண்ணுள் புதையுண்டதே
உயிர்தனை உயிர்கள் அழித்தனவே
நம் சிந்தை பித்தம் அடைந்தனவே

மதி அது மடமையில் வீழ்ந்ததுவே
கொலை வெறி நெஞ்சுள் எழுந்ததுவே
இன வெறி எம்மை மறைத்தனவே
மானிடத்தின் பயணம் தான் விண்ணை நோக்கி விரைந்தனவே

ஒன்றாய் வாழ மீளிணைவோம்
ஒன்றாய் சேர்ந்தே மீளமைப்போம்
ஒருதாய் பிள்ளையாய் மீண்டெழுவோம் – இந்நாளில்

M.R.M.R. கபீல்
தொழிநுட்ப உதவி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
குச்சவெளி

01 June 2022